விலை: 30.00
பக்கங்கள் : இருபது
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram WESTERN UNION WU
Ria
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-1928)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 03 வெள்ளிக்கிழமை (16.04.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 118

## கொரோனாவுடன் குருதி விஷமடைவு கரவெட்டியில் ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கொரோனா வைரஸ் தொற்றுடன் குருதி விஷமடைந்ததால் யாழ்.கரவெட்டியைச் சேர்ந்த முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவரது மரணத்துக்கான காரணம் கொரோனா வைரஸ் தொற்றுடன் உக்கிர குருதிவிஷமடைவு என அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

குறித்த விடயத்தை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல 19

## சாவகச்சேரி பெண் கொரோனாவால் பலி

### சுகாதார பணிப்பாளர் கேதீஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த 59 வயதுடைய பெண் ஒருவர் 19

### புதுக்குடியிருப்பில்
## சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் சடலமாக மீட்பு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட தேராவில் பகுதியில் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 19

## கொரோனா மேலும் நால்வர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்று காரணமாக மேலும் நால்வர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை சுகா 19

### சமூக ஊடகங்கள் மூலம்
# இனவாதத்தை தூண்டினால் தண்டிக்கப்படுவீர்கள்



### பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர

(கொழும்பு)

சமூக ஊடகங்கள் மூலம் இனவாதத்தைத் தூண்டும் கருத்துக்களை வெளியிடுவோர் தண்டிக்கப்படுவீர்கள் என பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இதற்கு குற்றவியல் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

### மின்னல் தாக்கியதில்
# மூன்று விவசாயிகள் முல்லையில் உயிரிழப்பு

*(பனிக்கன்குளம்)* முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்பு வயல் வெளியில் மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி மூன்று விவசாயிகள் உயிரிழந்துள்ளனர்.

(19ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியா தோணிக்கல்லில்
## ஒரே குடும்பத்தில் மூவருக்கு கொரோனா

(வவுனியா)

வவுனியா, தோணிக்கல் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேருக்கு நேற்று மாலை கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள் 19

### சுகாதார விதிமுறை கடுமையாக்கப்படும்
## சிவில் உடையில் நாடு முழுவதும் பொலிஸார் கண்காணிப்பர்

(கொழும்பு)

கோவிட் வைரஸ் தொற்றை கட்டுப்படுத்தும் நோக்கில் அமுல்படுத்தப்பட்டுள்ள சுகாதார விதிமுறைகள் தொடர்ந்தும் கடுமையாக அமுல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் - சிங்கள புத்தாண்டு காலத்தின் பின்னரும் சுகாதார விதிமுறை 19

### 2ஆவது பிசிஆர் பரிசோதனை
### திருநெல்வேலி சந்தையுடன் தொடர்புடைய
## 8 பேருக்கு கொரோனாத் தொற்று

(யாழ்ப்பாணம்)

2ஆவது பிசிஆர் பரிசோதனையில் திருநெல்வேலி சந்தை வர்த்தகர்களுடன் தொடர்புடைய 8 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று 19

## பண்டிகைக் காலத்தில் பொதுமக்கள் ஒன்று குவிந்ததன் விளைவாக
### கொரோனாத் தொற்று அதிகரிக்கும் அபாயம்
### தொற்று நோயியல் பிரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தில் பொதுமக்கள் ஒன்றுகுவிந்ததன் விளைவாக கோவிட் - 19 நோய்த் தொற்று எண்ணிக்கை உயர்வடையும் என தொற்று 19

## கொழும்பு துறைமுகம் தனிநாடாக உருவாகும்

### சீனாவின் நெடுநாள் திட்டத்தை அம்பலப்படுத்தினார் விஜயதாஸ



(கொழும்பு)

கொழும்புத் துறைமுக நகரம் ஒரு தனிநாடாக மாறும் ஆபத்து ஏற்பட்டுள் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அரசின் வீட்டுத் திட்டத்தினை நம்பி தற்காலிக வீட்டை இடித்த குடும்பம்

## மழை வெள்ளத்தால் நிர்க்கதி

(யாழ்ப்பாணம்)

வீட்டுத்திட்டம் கிடைத்த நம்பிக்கையில் இருந்த தற்காலிக வீட்டையும் இடித்த குடும்பம் தற்போது இருக்க வீடில்லாமல் நேற்று முன்தினம் பெய்த மழையினால் பாதிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் பளை - முல்லையடி கிராமத்தில் இடம்பெற்றிருக்கின்றது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த அரசாங்கத்தினால் குறித்த குடும்பத்தினருக்கு 2019 ஆம் ஆண்டு வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டிருந்தது.

தமது சொந்த செலவில் தமக்கென ஒரு தற்காலிக வீடு ஒன்று அமைத்து அதில் தங்கியிருந்த குடும்பம் தமக்கு கிடைத்த வீட்டுத்திட்டத்தையடுத்து புதிய வீடு கட்டுவதற்காக இருந்த தற்காலிக வீட்டையும் இடித்துள்ளனர். தமக்கு கொடுக்கப்பட்ட வீட்டுத்திட்டமானது விரைவில் முடிவடையும் என்ற நம்பிக்கையில்

சிறிய தற்காலிக குடிசை ஒன்று அமைத்திருந்தனர். இருப்பினும் ஒரு இலட்சம் ரூபாய் மட்டும் வழங்கப்பட்ட நிலையில் தமது புதிய வீடும் பாதியில் நிற்க,

இருந்த வீட்டையும் இடித்த நிலையில் சிறு கொட்டகையில் தானும்தனது மனைவிஇரு பிள்ளைகளுடன் பெரும் சிரமப்பட்டு வருவதாக தெரிவிக்கின்றனர்.

தற்பொழுது பெய்த மழையினால் தமது மேல் கூரை முழுவதுமாக மழை நீர் ஒழுகி குடிசை முழுவதுமாக தண்ணீர் வந்துள்ளது.

தமக்கு இதுவரையில் யாரும் வந்து எந்த விதமான உதவியும் செய்ததில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடங்களாகவே இதே நிலையில்தான் வாழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கின்றனர். (ம-03)

# வலி. மேற்கு - வலி. தென்மேற்கில் மூன்று நாட்களாக பெய்த மழையால்

## எள்ளு பயிர்செய்கை முற்றாக பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி. மேற்கு - வலி. தென்மேற்கில் கடந்த மூன்று நாட்களாக பெய்து வரும் கடும் மழையினால் நல்ல விளைச்சலை தரக்கூடிய நிலையில் இருந்த எள்ளுப்யிர்கள் முழுமையாக பாதிப்படைந்துள்ளன. இதனால் நல்ல அறுவடையை எதிர்பார்த்திருந்த விவசாயிகள் கடும் மழையினால் ஏற்பட்ட பாதிப்பைத் தொடர்ந்து பெரும் கவலையடைந்துள்ளனர்.

இதே நேரம் கடந்த வருடம் 2020 பெரும்போக நெற்செய்கை கடும் மழையினால் விவசாயிகளுக்கு பேரிடர் ஏற்பட்டு விவசாயிகள் முழு நஷ்டத்தை எதிர்நோக்கியிருந்தனர்.

இவ்வாறு நஷ்டத்தை எதிர்கொண்ட விவசாயிகளுக்கு காப்புறுதி வழங்குவதற்காக காப்புறுதி பதிவுகள், கமநல சேவை நிலையங்கள், விவசாய சம்மேளனங்கள் ஊடாக மேற்கொண்டு பல மாதங்கள் கழிந்த நிலையிலும் வலி. மேற்கு, வலி. தென்மேற்கு விவசாயிகளுக்கான நஷ்டஈடு இன்னும் கிடைக்கப்பெறாத நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை எதிர்பார்த்தவண்ணம் உள்ளனர்.

அதே நேரம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்திற்கும் கொண்டுவர எண்ணியுள்ளனர். (ம-03)

# சந்தையில் தீங்கு விளைவிக்கும் தேங்காய் எண்ணெய் இல்லை

## இராஜாங்க அமைச்சர் லசந்த தெரிவிப்பு

(கொழும்பு)

நாடுமுழுவதும் சந்தையில் தீங்கு விளைவிக்கும் தேங்காய் எண்ணெய் இல்லை என்பதை தற்போதைய விசாரணைகள் மேலும் உறுதிப்படுத்தியதாக நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் ஊடகங்களிடம் பேசிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தேங்காய் எண்ணெயில் நச்சுகள் இருப்பதற்கான தேடல் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

புற்றுநோய்க்கான எண்ணெய்களை நாட்டிற்கு இறக்குமதி செய்வது சமீபத்திய நிகழ்வு மட்டுமல்ல, பல தசாப்தங்களாக நடந்து வரும் ஒரு செயல்முறையாகும்" என்றும் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன கூறினார். (ம-03)

# திருக்குறள் விழா

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலகம் மற்றும் கல்வி பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இணைந்து நடாத்தும் திருக்குறள் விழா இன்று மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

முற்பகல் 10.00 மணிக்கு மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் செல்வி.ந.ரஞ்சனா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் க.விமலநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ம-03,350)


மு. புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி வன்னியின் பெருஞ்சமர் கடினப்பந்து துடுப்பாட்டப் போட்டியை முன்னிட்டு நடாத்தப்பட்ட அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

| பரிசு | சிட்டை இலக்கம் |
|---|---|
| 1 ஆம் பரிசு | 01751 |
| 2 ஆம் பரிசு | 06002 |
| 3 ஆம் பரிசு | 10444 |

ஆறுதல் பரிசுகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | 00988 | 6 | 05282 |
| 2 | 08350 | 7 | 03401 |
| 3 | 10922 | 8 | 07381 |
| 4 | 06868 | 9 | 01648 |
| 5 | 08332 | 10 | 08471 |

(C-1980)

பழைய மாணவர் சங்கம்
மு / புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி


# தடை செய்யப்பட்ட பொருட்களை சிறை கொண்டு செல்லத் தடை

(கொழும்பு)

தடைசெய்யப்பட்ட பொருட்களைச் சிறைச்சாலைகளுக்குள் கொண்டு செல்வதற்கு தடையேற்படுத்தப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த சில வாரங்களாகச் சிறைச்சாலைகளுக்குள் தடை செய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு செல்லும் செயற்பாடுகள் அதிகரித்திருந்தன.

இந்த செயற்பாடுகள் புதுவருட காலத்தின்போது அதிகரித்திருந்தன.

இதன்போது கைத்தொலைபேசிகள், போதை வஸ்துப் பொருட்கள் என்பன சிறைச்சாலைகளுக்குள் எடுத்துச்செல்லப்பட்டமை கண்டறியப்பட்டது.

இதேவேளை சிறைச்சாலைகளுக்குள்ளும் சட்டவிரோதப் பொருட்களை தேடியறியும் செயற்பாடுகள் அவ்வப்போது இடம்பெற்று வருவதாகச் சிறைச்சாலைகள் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (ம-03)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



வருஷாப்திய அழைப்பு



வட்டுக்கோட்டை சிவஸ்ரீ க. குருமூர்த்திக் குருக்களின் மகளாகிய
அமரர் ஸ்ரீமதி நாகம்மா சச்சிதானந்த சர்மா
அவர்களின் வருஷாப்திய கிரியைகள் நாளை (17.04.2021) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.
காலை 9.00 மணிக்கு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டி கும்ப அபிஷேக ஆராதனை நடைபெற்று சகஸ்ரநாம அர்ச்சனையும் நடைபெறும்.
இந் நிகழ்வுகளில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
வட்டுக்கோட்டை தெக்கணப்பாய்
கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய பரிபாலன சபை, தொண்டர் சபை.



துயர் பகிர்கின்றோம்



எமது சபையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றி வரும் திருமதி சுகிர்தா இராகுலன் அவர்களின் அன்புத் தந்தையார்
இராசையா பாலசுப்பிரமணியம்
(பாலு)
அவர்கள் 14.04.2021 கனடாவில் இயற்கையெய்திய செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
(C-1983)
துயரில்... ஊழியர் நலன்புரிச் சங்கம்
வலி. கிழக்கு பிரதேச சபை- புத்தூர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் தடையைக் கண்டுகொள்ளாத அமெரிக்கா

# புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுடன் தொடர்ந்து ஈடுபாடு

(கொழும்பு)

**இலங்கை தடை விதித்துள்ளபோதும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுடன் தொடர்ந்து ஈடுபாடு கொண்டு வருவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. இது இலங்கைக்கு பாரிய பின்னடைவாகக் கருதப் படுகிறது.**

பிரித்தானிய தமிழர் பேரவை, கனேடிய தமிழ் காங்கிரஸ், அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், உலகத்தமிழர் பேரவை, கனேடிய தமிழர் தேசிய அவை, கனடா, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து தமிழ் இளையோர் அமைப்புக்கள், உலக தமிழர் ஒருங்கிணைப்புக் குழு ஆகிய அமைப்புகளுக்கு கடந்த மாதம் தடை விதித்து இலங்கை உத்தரவிட்டது.

மேலும் அமைப்புகள் சார்ந்த தனி 300-க்கும் மேற்பட்ட நபர்களுக்கும் தடை விதிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

இந்நிலையில் இலங்கையால் தடை விதிக்கப்பட்ட தமிழ் அமைப்புக்கள் உட்பட தெற்காசியாவில் உள்ள புலம்பெயர் அமைப்புக்களுடன் தொடர்ந்தும் ஈடுபாட்டைக் கொண்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

பிராந்தியங்களுடன் இணைந்து செயற்படுவதில் புலம்பெயர் சமூகங்கள் எங்கள் மதிப்புமிக்க பங்காளிகளாக உள்ளனர். இந்நிலையில் இலங்கையைச் சேர்ந்த புலம்பெயர் அமைப்புக்கள் உட்பட தெற்காசிய புலம்பெயர் அமைப்புக்களுடன் நாங்கள் தொடர்புகளை பேணி வருகிறோம். பரஸ்பர நலன்கள் குறித்து நாங்கள் தொடர்ந்து பேசி வருகிறோம் என அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-8)

# கொரோனா தடுப்பூசி பாகுபாடின்றி அனைவரையும் சென்றடைய வேண்டும்

## சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் கொவிட் - 19 தடுப்பூசி வழங்கப்படும் இடங்கள் மற்றும் திகதி போன்ற விடயங்கள் உரியவாறு அனைத்து தரப்பினரையும் சென்றடையவில்லை என்று சுட்டிக்காட்டியிருக்கும் சர்வதேச மன்னிப்புச்சபை, எவ்வித பாகுபாடுகளுமின்றி அனைவரும் தடுப்பூசி பெற்றுக்கொள்வதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தியிருக்கிறது.

இதுகுறித்து சர்வதேச மன்னிப்புச் சபையினால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தெற்காசியப்பிராந்தியத்தில் உள்ள வசதிகள் குறைவான நாடுகள் கொவிட் - 19 தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதில் தடைகளை எதிர்நோக்காமலிருப்பதை அந்நாடுகளின் அரசாங்கங்கள் உறுதி செய்ய வேண்டும்.

அதுமாத்திரமன்றி பிராந்திய ரீதியில் ஏற்பட்டிருக்கும் தடுப்பூசிக்கான 'பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு, அதன் உற்பத்தியை தேசிய ரீதியானதாக மாற்ற வேண்டும் என்றும் சர்வதேச சமூகத்தை வலியுறுத்துகின்றோம்.

அண்மைக்காலத்தில் தெற்காசியப் பிராந்திய நாடுகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தடுப்பூசி வழங்கல் செயற்றிட்டத்தைப் பொறுத்தவரையில் பெரும்பாலும் தலித் சமூகத்தினர், சிறுபான்மை இனத்தவர்கள், கூலித்தொழிலாளர்கள், சுத்திகரிப்புப் பணியாளர்கள், தேயிலைத்தோட்டத் தொழிலாளர்கள், பின்தங்கிய பிரதேசங்களில் வாழ்வோர், சிறைக்கைதிகள், தத்தமது நாடுகளுக்குள்ளேயே இடம்பெயர்ந்தவர்கள் உள்ளிட்டோருக்கு பெரும்பாலும் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையேற்பட்டுள்ளது.

அதற்கு தடுப்பூசி வழங்கலில் பற்றாக்குறை மற்றும் இது குறித்த போதிய விழிப்புணர்வின்மை ஆகியவை பிரதான காரணங்களாக அமைந்துள்ளன.

இன, மத ரீதியான வேறுபாடுகள், சமூக - பொருளாதார தகுதிகள் போன்ற எவ்விதமான பாகுபாடுகளுமின்றி அனைவரும் கொவிட் - 19 தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலையை தெற்காசியப்பிராந்திய நாடுகளின் அரசாங்கங்கள் உறுதி செய்ய வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் கொவிட் - 19 தடுப்பூசி வழங்கப்படும் இடங்கள் மற்றும் திகதி உள்ளிட்ட சரியான தகவல்கள் மக்களை சென்றடைவதில் பல்வேறு தடைகள் காணப்படுகின்றன.

அதேபோன்று தடுப்பூசி வழங்கல் திட்டம் மற்றும் பரந்த எண்ணிக்கையிலான மக்களுக்குத் நோய்த்தொற்று ஏற்படுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் ஆகியவை குறித்து ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் மற்றும் இலங்கை போன்ற நாடுகள் போதிய த்தகவல்களைக் கொண்டிராத நிலை காணப்படுகின்றது.


எனவே கொவிட் - 19 தடுப்பூசி வழங்கல் திட்டம் தொடர்பான தகவல்கள் அனைத்து சமூகங்களுக்கிடையிலும் அவர்களுக்குப் புரியக்கூடிய மொழி அல்லது வடிவில் பரிமாற்றம் செய்யப்பட வேண்டியது அவசியமாகும் என்று அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (நி-8)

# பாரதியாரின் உருவச்சிலை திறப்பு

(குப்பிழான்)

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் சிலை கைதடிச் சந்திக்கு அருகாமையில் ஏ-9 வீதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அறவழிப் போராட்டக் குழுவின் நிறுவுனரும், இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவருமான மறவன்புலவு க.சச்சிதானந்தன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மேற்படி சிலையைத் திறந்து வைத்தார்.



(படம்- செ. ரவிசாந்)

# சிறைச்சாலைக்குள் அதிகரிக்கும் போதைப் பாவனை

(கொழும்பு)

போதைப்பொருள் உள்ளிட்ட தடை செய்யப்பட்ட பொருட்கள் சிறைச்சாலைக்கு எடுத்து வரும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

பண்டிகைக் காலத்தில் பெருமளவான தடை செய்யப்பட்ட பொருட்கள் கொண்டு வரப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறான தடை செய்யப்பட்ட பொருட்களை சிறைச்சாலைக்குள் கொண்டு வரும் வெளிநபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சிறைச்சாலைகள் திணைக்கள ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார். (நி-8)

# மதுபோதையில் சாரத்தியம்; 758 பேர் கைது

(கொழும்பு)

மதுபோதையில் வாகனம் செலுத்தியமைக்காக கடந்த 24 மணி நேரத்தில் 758 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ள னர்.

பண்டிகைக் காலத்தில் மது போதை யுடன் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளைச் சட்டத்தின் பிடியில் சிக்க வைக்கும் விசேட தேடுதல் நடவடிக்கை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை முன் னெடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மது போதையில் வாகனத்தைச் செலுத்து வோருக்குப் பிணை வழங்கப் படமாட்டாது. இவர்கள் நீதிமன்றத்தின் முன் ஆஜர் படுத்தப்படுவோர்கள் என்றும் அவர் தெரிவித்தார். (நி-8)

# இயக்கச்சியில் மீட்கப்பட்ட கார் தென்பகுதியைச் சேர்ந்தவருடையது

(கிளிநொச்சி)

இயக்கச்சி காட்டுப் பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட கார் வாடகைக்கு பெற்றுக்கொண்ட நிலையில் கடத்தப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

கொழும்பு பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமான இந்த கார், வாடகை அடிப்படையில் சிலரினால் கொண்டு செல்லப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு இளைஞர்களினால் இந்த கார் வாடகை அடிப்படையில் எடுத்துச் செல்லப்பட்டுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கண்டுபிடிக்கப்பட்ட கார் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இந்தச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளைப் பளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது இருபது-20 போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றி- பாபர் அசாம் அதிரடி

தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கான 20 ஓவர் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

4 போட்டிகளை கொண்ட 20 ஓவர் கிரிக்கெட் தொடரின் 2 போட்டிகள் நடைபெற்ற நிலையில் 1-1 என்ற கணக்கில் இரு அணிகளும் சமநிலையில் இருந்தன.

இரு அணிகளுக்கும் இடையேயான 3ஆவது இருபது-20 போட்டி செஞ் சூரியன் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

டொஸ் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது.

தென்னாபிரிக்க அணியின் தொடக்க வீரர்களாக மாலன் மற்றும் மார்க்ரம் ஆகியோர் களமிறங்கினர்.


இரு வீரர்களும் தொடக்கம் முதலே அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். சிறப்பாக விளையாடிய இருவரும் அரைச்சதம் கடந்தனர்.

63 ரன்கள் குவித்த மார்க்ரம் பாகிஸ்தான் வீரர் முகமது நவாஸ் பந்துவீச்சில் அவுட் ஆகி வெளியேறினார். அடுத்துவந்த ஜார்ஜ் லிண்டி 22 ரன்களில் வெளியேறினார்.

55 ரன்கள் குவித்திருந்த மாலனின் விக்கெட்டை முகமது நவாஸ் வீழ்த்தினார். அடுத்துவந்த வென் டெர் டஸ்சன் அதிரடியாக 34 ரன்கள் குவித்து களத்தில் இருந்தார்.

இறுதியில் 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்த தென்னாபிரிக்க அணி 203 ரன்களை குவித்தது.

பாகிஸ்தான் தரப்பில் அந்த அணியின் முகமது நவாஸ் அதிகபட்சமாக 2



விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

204 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் பாகிஸ்தான் அணியின் தொடக்க வீரர்களாக முகமது ரிஸ்வான் மற்றும் கப்டன் பாபர் அசாம் களமிறங்கினர்.

தொடக்கம் முதலே இரு வீரர்களும் அதிரடியாக ஆடி அரைச்சதம் கடந்தனர்.

122 ரன்கள் குவித்த பாகிஸ்தான் கப்டன் பாபர் அசாம் தென்னாபிரிக்க வீரர் வில்லியம்ஸ் பந்து வீச்சில் அவுட் ஆகி வெளியேறினார்.

14 பந்துகளில் 7 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற நில்லையில் அடுத்து களமிறங்கிய பகர் சமான் 2 பந்துகளில் 2 பவுண்டரிகள் விளாசினார்.

இதனால், 2 ஓவர்கள் மீதமிருந்த நிலையில் பாகிஸ்தான் அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 205 ரன்கள் எடுத்து தென்னாபிரிக்க அணியை வீழ்த்தியது.

பாகிஸ்தான் அணியின் முகமது ரிஸ்வான் 73 ரன்கள் எடுத்த நிலையிலும், பகர் சமான் 8 ரன்கள் எடுத்த நிலையிலும் களத்தில் இருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் 4 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் 2-1 என்ற கணக்கில் பாகிஸ்தான் அணி முன்னிலையில் உள்ளது. பாகிஸ்தான் அணியின் கப்டன் பாபர் அசாம் ஆட்டநாயகன் விருதை பெற்றார்.

இரு அணிகளும் மோதும் 4ஆவது மற்றும் கடைசி இருபது-20 போட்டி இன்று நடைபெறவுள்ளது. (6)




# ஐ.சி.சியின் தரவரிசையில் இலங்கை கிரிக்கெட் அணியினர் மூவர் மட்டுமே தெரிவு

ஐ.சி.சி.யின் டெஸ்ட் மற்றும் சர்வதேச ஒருநாள் ஆகிய இரண்டு வகையான கிரிக்கெட் போட்டிகளின் தனிநபர் தரப்படுத்தலில் இலங்கையர்கள் எவரும் இடம்பெறாத நிலையில் சர்வதேச இருபதுக்கு 20 போட்டிப் பிரிவில் மாத்திரம் இலங்கையர்கள் மூவர் இடம் பெற்றுள்ளனர்.

இலங்கைக்கு பின்னர் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் கால் பதித்த பங்களாதேஷ், சர்வதேச கிரிக்கெட் அரங்கில் அண்மையில் நுழைந்த ஆப்கானிஸ்தான் அணிகளின் வீரர்கள்கூட இலங்கையர்களைக் காட்டிலும் சிறப்பான தரவரிசைகளில் உள்ளனர்.

இதில் சர்வதேச இருபதுக்கு 20 தனிநபர் தரப்படுத்தல்களில் லக்சான் சந்தகன், வனிந்து ஹசரங்க மற்றும் சமரி அத்தபத்து ஆகிய மூவரைத் தவிர எவரும் முதல் 10 இடங்களில் இல்லை என்பது கவனிக்கத்தக்க விடயமாகும்.

இதில் சந்தகன் 639 புள்ளிகளுடனும் ஹசரங்க 625 புள்ளிகளுடனும் ஆண்களுக்கான சர்வதேச இருபதுக்கு 20 இன் பந்து வீச்சாளர்களுக்கான தனிநபர் தரப்படுத்தலில் முறையே 9 ஆம் மற்றும் 10 ஆம் இடங்களை வகிக்கின்றனர்.

இலங்கை பெண்கள் கிரிக்கெட் அணித்தலைவியான சமரி அத்தப்பத்து பெண்களுக்கான சர்வதேச இருபதுக்கு 20 இன் சகலதுறை தரப்படுத்தலில் 265 புள்ளிகளுடன் 6 ஆவது இடத்தை வகிக்கிறார். (6)

## அன்ரிச் நோர்டியாவுக்கு கொரோனாத் தொற்று

ஐ.பி.எல். போட்டிக்கான டெல்லி கப்பிட்டஸ் அணியில் இடம் பிடித்துள்ள வேகப்பந்து வீச்சாளர் அன்ரிச் நோர்டியா கடந்த 6 ஆம் திகதி மும்பை வந்து 7 நாட்கள் தனிமைப் படுத்துதலை கடைப்பிடித்தார்.

பாகிஸ்தானுக்கு எதிரான ஒரு நாள் போட்டி தொடரில் இருந்து பாதியில் விலகிய அவர் சக வீரர் காஜிசோ ரபடாவுடன் இணைந்து இங்கு வந்தார்.

இந்நிலையில் தனிமைப் படுத்தலின் போது அன்ரிச் நோர்டியாவுக்கு நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்றிருப்பது தெரியவந்தது.

இதைத் தொடர்ந்து அவர் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. (6)

# இலங்கை இளம் கிரிக்கெட் வீரர்களுக்கு நான் கற்றுக்கொண்டதை வழங்க தயங்கமாட்டேன்

## டில்சான் தெரிவிப்பு

தற்போது அவுஸ்திரேலியாவில் வசித்துவரும் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான திலகரட்ன டில்ஷான் அங்குள்ள உள்ளூர் கிரிக்கெட் கழகம் சார்பாக விளையாட ஒப்பந்தமாகியுள்ளார்.

இந்நிலையில், பயிற்றுநர் குழாமுக்கு இணைந்து கொள்ளுமாறு தனக்கு கிடைத்த அழைப்புக்களை நிராகரித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில்,



“எதிர்வரும் ஒக்டோபர் மாத காலத்தில் அவுஸ்திரேலியாவிலுள்ள கழக அணியொன்றுக்காக முதற்தர கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவதற்கு ஒப்பந்தமாகியுள்ளேன்.

பயிற்றுநர் குழாமில் இணைந்து கொள்ளுமாறு மூன்று நாடுகளிலிருந்து கிடைத்த அழைப்பை நான் நிராகரித்தேன்.

எனினும், எனது தாய் நாட்டுக்கு எதுவேண்டுமானாலும் செய்யத் தயாராகவுள்ளேன்.

20 வருட காலமாக நான் கற்றுக்கொண்டதை இலங்கை கிரிக்கெட்டுக்கும் இளம் கிரிக்கெட் வீரர்களுக்கும் வழங்குவதற்கு தயங்கமாட்டேன். ஏனெனில், அதுவே எனது திட்டமாகும்” என்றார். (6)




“HILLS STRIKERS” விளையாட்டுக் கழகத்தினால் 2021 ஆம் ஆண்டிற்கான துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி கடந்த இரு தினங்களாக ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. 22 அணிகள் பங்குபற்றிய சுற்றுப்போட்டியில் சிதம்பரபுரம் சக்தி விளையாட்டுக்கழகமும் கோமரசங்குளம் பரலோகமாதா விளையாட்டுக்கழகமும் இறுதிப் போட்டியில் பலப்பரீட்சை நடத்தின. இதில் சக்தி விளையாட்டுக்கழகம் வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (படம்: சதீஷ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபையை ஒழிப்பதற்கு நாங்கள் இடம் கொடுக்க மாட்டோம்



## பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்

(கரணவாய்)

**மாகாணசபை முறையை ஒழிப்பதற்கு நாங்கள் இடம் கொடுக்க மாட்டோம். ஆனால் வெறுமனே இருக்கின்ற மாகாணசபை முறை எங்கள் பிரச்சினைக்குத் தீர்வு என்றும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். மாகாண சபை முறைமை இருக்க வேண்டும். அது முழு அதிகாரங்களைப் பெற்றதாக ஒரு சமஷ்டி கட்டமைப்பில் வடக்கு-கிழக்கு இணைந்த ஒரு ஆட்சியாக மலர வேண்டும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரி வித்தார்.**

புதுவருட தினமான நேற்று முன்தினம் புதன்கிழமை அல்வாய் கிழக்கு, இலகடியில் உள்ள தமிழரசுக்கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்ற புத்தாண்டு பொங்கல் நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்துக்குள்ளே மாகாண சபைத் தேர்தல் நடத்துவது பற்றி பெரியதொரு இழுபறி நடந்து கொண்டிருக்கிறது என்று எங்களுக்குத் தெரிகிறது. அரசியல் கட்சியாக அவர்கள் அந்த இரண்டாவது நிலையிலேயும் தாங்கள் ஆட்சிகளை கைப்பற்ற வேண்டும் என்று சிந்திக்கிறார்கள். ஆனால் கடும்போக்குவாத பின்னணியைக் கொண்ட பலர் இந்த அரசாங்கத்தை இந்தத் தடவை பதவிக்கு கொண்டு வந்தவர்கள் விசேடமாக ஜனாதிபதியின் வெற்றிக்காக உழைத்த இனவாத சிந்தனை உள்ள கடும்போக்குவாதிகள் மாகாணசபை முறை அகற்றப்பட வேண்டும் என்று தங்களுடைய நிலைப்பாட்டை தெளிவாக தெரிவிக்கிறார்கள். ஆகையினாலே இந்த இரண்டு தரப்பினர்களுக்கு இடையே நடக்கின்ற இழுபறி யாருக்கு வெற்றியில் முடியும் என்பதை எங்களால் சொல்ல முடியாதிருக்கிறது.

எங்களைப் பொறுத்த வரையிலே மாகாணசபை முறையை ஒழிப்பதற்கு நாங்கள் இடம் கொடுக்க மாட்டோம். ஆனால் வெறுமனே இருக்கின்ற மாகாண சபை முறையோடு நாங்கள் எங்கள் பிரச்சினைக்கு தீர்வு என்றும் ஏற்றுக் கொள்ள மாட்டோம். மாகாண சபை முறைமை இருக்க வேண்டும். ஆனால் அது முழு அதிகாரங்களைப் பெற்றதாக ஒரு சமஷ்டி கட்டமைப்பில் வடக்கு-கிழக்கு இணைந்ததாக ஒரு ஆட்சியாக மலர வேண்டும். அதற்கான எங்களுடைய யோசனைகளை இந்த அரசாங்கம் நியமித்துள்ள குழுவுக்கு முன்வைத்துள்ளோம் என சுமந்திரன் தெரிவித்தார். (நி-8-60)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 47 1/2 செவ் 10 சூரி 11 இல் உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: **Banking Cou, Degree Work-HNB**<br>எதிர்பார்ப்பு: அழகிய அரச, தனியார் தொழில் புரிபவர், உள்நாடு மட்டும்<br>தொ.இ: **B/11775** | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 25 3/4 செவ் 1 சூரி 3 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: **PHD Teaching Assistant**<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, வெளிநாடும் விரும்பத்தக்கது<br>தொ.இ: **G/11178** |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: - செவ் 9 சூரி 7 இல் உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: **A/L**, தனியார் கடை<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண், வெளிநாடும் விரும்பத்தக்கது<br>தொ.இ: **B/11777** | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 44 செவ் 2 சூரி 12 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: விவசாய பட்டதாரி, தொழில்-திட்ட அலுவலகர் (தனியார்)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி மணமகன் மட்டும், அரச தொழில், வெளிநாடும் விருப்பம்<br>தொ.இ: **G/3633** |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 18 3/4 செவ் 2 சூரி 12 இல் உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: **A/L**, பாடசாலை நூலக உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: மணமகன் விவாகரத்து ஆனவர், விவாகரத்தும் ஏற்கப்படும்<br>தொ.இ: **B/11779** | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 46 செவ் 2 சூரி 12 இல்<br>தகைமை/தொழில்: **O/L**<br>எதிர்பார்ப்பு: குணமான ஆண்<br>தொ.இ: **G/3638** |
| பிறப்பு: 1985 இந்து நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 54 செவ், சூரி 8 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: **BBA**, கடை<br>எதிர்பார்ப்பு: லண்டனில் விசா உள்ள பண்பான பெண்<br>தொ.இ: **B/11780** | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 7 3/4 செவ் 3 சூரி 9 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: **Doctor ( MBBS)**<br>எதிர்பார்ப்பு: **Doctor, Engineer**<br>தொ.இ: **G/3730** |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


## 80 இலட்சம் பெறுமதியான போதைப்பொருளுடன் இருவர் கைது

(கொழும்பு)

80 இலட்சம் ரூபாய் பெறுமதியான போதைப்பொருளுடன் வெலிகம பகுதியில் வைத்து 2 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் வெலிகம பகுதியைச் சேர்ந்தவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போதே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-8)

## 3 தவணைகளிலும் பாடப் புத்தகங்களை வழங்கத் திட்டம்

(கொழும்பு)

அடுத்த வருடம் முதல் பாடசாலை மாணவர்களுக்கு மூன்று தவணைகளிலும் பாடப்புத்தகங்களை வழங்குவதற்கு கல்வி மறுசீரமைப்பு, தொலைதூரக் கல்வி, திறந்த பல்கலைக்கழகங்கள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு திட்டமிட்டுள்ளது.

புதிய கல்வி மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். (நி-8)

## நாட்டில் 104 நாட்களில் 400 கொரோனா மரணங்கள்

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டில் இதுவரையான காலப் பகுதி வரை கொரோனா வைரஸ் தொற்று காரணமாக 400 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு உறுதிப்படுத்திய புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் வரை இலங்கையில் கொரோனா தொற்றால் மொத்தமாக 604 பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த டிசெம்பர் மாதம் வரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 204 ஆக காணப்பட்டது.

எவ்வாறாயினும் இந்தாண்டின் 104 தினங்களில் 400 பேர் வைரஸ் தொற்றால் இறந்துள்ளனர். இதனடிப்படையில் இந்தாண்டின் இதுவரையான காலப் பகுதியில் தினமும் சுமார் 4 பேர் கொரோனாத் தொற்றால் இறந்துள்ளனர். (நி-8)


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532



**யா/யூனியன் கல்லூரி-தெல்லிப்பழை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய பொதுக்கூட்டம்**

காலம்: 30.04.2021 (வெள்ளிக்கிழமை)
நேரம்: பி.ப. 2.00
இடம்: ஆலய மண்டபம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை

அனைத்து அம்பாள் அடியார்களையும் பங்குபற்றுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தலைவர்
ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம்,
யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை. (C-1976)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரணி மணிக்காவில் குளத்தை புனரமைக்கக் கோரிக்கை

(வரணி)

**40 வருடங்களாக புனரமைப்பின்றிக் காணப்படும் வரணி மணிக்காவில் குளத்தை புனரமைத்துத்தருமாறு அப் பகுதி மக்களும் விவசாயிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

''தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட இடைக்குறிஞ்சி கிராம உத்தியோகத்தர்கள் பிரிவில் அமைந்துள்ள மணிக்காவில் குளமானது நாற்பது வருடங்களுக்கு மேலாக எந்தவித புனரமைப்பும் இன்றி சேறும் சகதியும் நிறைந்து தூர்ந்து போகின்ற நிலையில் காணப்படுவதாக மக்களும் விவசாயிகளும் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இக்குளமானது மீசாலை கமநல சேவை நிலையப் பிரிவிற்குட்பட்ட இடைக் குறிச்சி கமக்கார அமைப்பின் கீழ் உள்ளது எனவும் இதன் புனரமைப்பு தொடர்பாக உரிய தரப்புக்களுக்கு பலமுறை தெரியப்படுத்திய போதிலும் இதுவரைக்கும் புனரமைப்புச் செய்யப்பட வில்லை என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இந்தக்குளம் புனரமைக்கப் பட்டால் கால்நடைகள் நீர் அருந்துவதற்கும் மக்கள் நீராடுவதற்கும், விவசாயிகள் பயிர்ச் செய்கை நடவடிக்கையை மேற்கொள்வதற்கும் பயன்படுத்த முடியும் எனவும் தெரிவிக்கின்றனர்.

எனவே கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினர் மணிக்காவில் குளத்தினை புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்களும் விவசாயிகளும் சமூக ஆர்வலர்களும் கேட்டுக் கொள்கின்றனர். (5-6-103)



**சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டுக் கொக்குவில் பொற்பதி இந்து விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்தவங்கிப் பிரிவின் அனுசரணையில் இரத்ததான முகாம் நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்றது. (படம்: ரவிசாந்)**

# சிறிதரன், சுமந்திரன் யாழ்.போதனாவுக்கு விஜயம்



(நல்லூர்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு விஜயத்தினை மேற்கொண்டு அங்குள்ள குறைபாடுகள் தொடர்பில் ஆராய்ந்தனர். யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் யமுனாநந்தா மற்றும் வைத்திய நிபுணர்களுடன் கலந்துரையாடியதோடு வைத்தியசாலையில் தற்போது நிலவும் ஆளணிப் பற்றாக் குறை, வைத்திய உபகரணக் குறைபாடுகள் தொடர்பில் ஆராய்ந்து வைத்தியசாலை விடுதிகளையும் நேரில் சென்று பார்வையிட்டனர். (5-6-33-315)

# மஹோற்சவம்

(ஏழாலை)

ஏழாலை கிராமத்தில் ஏழு ஆலயங்களோடு ஒன்றிணைந்து வழிபாடு செய்கின்ற ஆலயங்களில் ஒன்றான ஏழாலை பெரிய தம்பிரான் ஆலயம் நேற்று புதன் கிழமை இரவு 8 மணிக்கு பாரம்பரிய முறைப்படி சாடியடியிலிருந்து கொடிமரமானது எடுத்துவரப்பட்டு கொடியேற்றம் நடைபெற்றது.

இதில் எதிர்வரும் 21 ஆம் திகதி புதன் கிழமை இரவு பாரம்பரிய முறைப்படி கிரியைகள் இடம் பெற்று மறுநாள் வியாழக்கிழமை தீமிதிப்பு நிகழ்வு இடம் பெறும்.

அதனைத் தொடர்ந்து 28 ஆம் திகதி கொடி இறக்கும் வைபமும் இடம்பெறும். (5-6-26)

(குப்பிழான்)

ஏழாலை அத்தியடி முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.45 மணிய ளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ள இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் தேர்த் திருவிழாவும், மறுநாள் 26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணியளவில் தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (5-6-18)

# ஆட்சேர்ப்பிற்கான திறந்த போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சைகை மொழிபெயர்ப்பாளர் மற்றும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் முன்பள்ளி ஆசிரியர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை நாளை 17 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

குறித்த பரீட்சைக்கு விண்ணப்பித்த தகைமையுடைய பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் யாவும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் '' செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல. 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்'' என்னும் முகவரியுடனோ அல்லது 021 221 9939 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறும் அனுமதி அட்டைகள் இருந்தால் மட்டுமே பரீட்சைக் குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் எனவும் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் சி. திருவாகரன் அறிவித்துள்ளார். (5-6)

# சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை, வட கிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான சதுர்த்தி உற்சவம் இன்று 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை இடம்பெறும். இதில் பிற்பகல் 4 மணியளவில் அபிஷேகம்,மூலமூர்த்தி பூஜை, வசந்தமண்டப பூஜை என்பன நடைபெற்று விநாயகர் வீதி வலம் வருதலும் இடம் பெறும். (5)

# விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற் காக இறை ஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெற்று வருகின்றன.

அந்த வகையில் நாளை 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள் ளன.

விசேட பூஜை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் பிரதம குருக்கள் தர்மை ஆதீன ஆகம பிரவீன சிவஸ்ரீ கைலை வாமதேவக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம் பெறும் ''ஆலய தரிசனம்'' நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒளிபரப்புச் செய்யப்படும். (5-6)



**தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகம் மற்றும் கொச்சிக்கடை லயன்ஸ் கழகம் ஆகியன இணைந்து அண்மையில் கொடிகாமம் திருநாவுக்கரசு பாடசாலை மாணவர்கள் 130 பேருக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்திருந்தன. (படம்:-சுபேசன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல் - நல்லூர் பிரதேச சபை
# சபை நிதி வேலைத்திட்டம் 2021 (கட்டம் I)

01. தலைவர் பெறுகைக்குழு நல்லூர் பிரதேச சபை கொக்குவில் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ் குறிப்பிட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வேலைகளுக்காக கோருகின்றார்.

02. தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2019.05.08 ஆம் திகதி 04/2016 (11) ஆம் இலக்க பொது சுற்றறிக்கை **3.2** பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பிராந்திய விருப்பம் மற்றும் **CIDA** தர முன்னுரிமைகள் பொருந்தும்

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் **(Black List)** சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் **(CIDA)** பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை **(Schedule)** கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் '**தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில்**' எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - **021 222 2700, 021 314 2841**) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணமொன்றை **தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் என்னும் முகவரியில் 2021.04.16 ஆம் திகதியிலிருந்து 2021.05.06 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப.9.00 தொடக்கம் பி.ப. 15.00 வரையும்** மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** என்னும் முகவரிக்கு **2021.05.07 ஆம்** திகதி மு.ப.10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்வி பிணை வைப்புத் தொகையினை கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் **2021.04.28** ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் மு.ப. **10.00** மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ள முடியும்.

| இல | தொடர்பு இலக்கம் | வேலை விபரம், ஒப்பந்த இலக்கம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து செல்லுபடியாகும் காலம் | | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | செல்லுபடியாகும் காலம் | செல்லுபடியாகும் திகதி | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| | | | | | வட்டார ரீதியான வீதி வேலைகள் | | | | |
| 1. | NPS/2021/ CF/01/WD-02/01 | வட்டார ரீதியான கொங்கிறீர் வீதி புனரமைப்பு- வட்டாரம் 02- கோண்டாவில் | 0.42 | 60 நாட்கள் | C9/C8 | 49 நாட்கள் | 24.06.2021 | 6,000.00 | 22.07.2021 |
| 2. | NPS/2021/ CF/01/WD-03/02 | வட்டார ரீதியான தார் வீதி புனரமைப்பு- வட்டாரம்03 கோண்டாவில் | 0.87 | 60 நாட்கள் | C9/C8 | 49 நாட்கள் | 24.06.2021 | 10,000.00 | 22.07.2021 |
| 3. | NPS/2021/ CF/01/WD-04/03 | வட்டார ரீதியான தார் வீதி புனரமைப்பு- வட்டாரம் 04 கொக்குவில் | 0.91 | 60 நாட்கள் | C9/C8 | 49 நாட்கள் | 24.06.2021 | 12,000.00 | 22.07.2021 |
| 4. | NPS/2021/ CF/01/WD-05/04 | வட்டார ரீதியான தார் வீதி புனரமைப்பு- வட்டாரம் 05 கொக்குவில் | 4.15 | 120 நாட்கள் | C8/C7 | 63 நாட்கள் | 08.07.2021 | 60,000.00 | 05.08.2021 |
| 5. | NPS/2021/ CF/01/WD-06/05 | வட்டார ரீதியான தார் வீதி புனரமைப்பு- வட்டாரம் 06 கொக்குவில் | 1.96 | 120 நாட்கள் | C9/C8 | 49 நாட்கள் | 24.06.2021 | 25,000.00 | 22.07.2021 |
| 6. | NPS/2021/ CF/01/WD-07/06 | வட்டார ரீதியான தார் வீதி புனரமைப்பு- வட்டாரம் 07 கொக்குவில் | 4.16 | 120 நாட்கள் | C8/C7 | 63 நாட்கள் | 08.07.2021 | 60,000.00 | 05.08.2021 |
| 7. | NPS/2021/ CF/01/WD-08/07 | வட்டார ரீதியான தார் வீதி புனரமைப்பு- வட்டாரம்08 திருநெல்வேலி | 3.48 | 120 நாட்கள் | C8/C7 | 63 நாட்கள் | 08.07.2021 | 45,000.00 | 05.08.2021 |
| 8. | NPS/2021/ CF/01/WD-09/08 | வட்டார ரீதியான தார் வீதி புனரமைப்பு- வட்டாரம்09 திருநெல்வேலி | 3.53 | 120 நாட்கள் | C8/C7 | 63 நாட்கள் | 08.07.2021 | 45,000.00 | 07.08.2021 |
| 9. | NPS/2021/ CF/01/WD-11/09 | வட்டார ரீதியான தார் வீதி புனரமைப்பு- வட்டாரம் 11 அரியாலை | 2.74 | 120 நாட்கள் | C8/C7 | 63 நாட்கள் | 08.07.2021 | 35,000.00 | 07.08.2021 |
| 10. | NPS/2021/ CF/01/WD-12/10 | வட்டார ரீதியான தார் வீதி புனரமைப்பு- வட்டாரம் 12அரியாலை | 3.53 | 120 நாட்கள் | C8/C7 | 63 நாட்கள் | 08.07.2021 | 45,000.00 | 07.08.2021 |
| | | | | | வடிகாலமைப்பு வேலைகள் | | | | |
| 11. | NPS/2021/ CF/01/WD-11/01 | முள்ளி வீதி 1ம் ஒழுங்கயின் வடிகால் அமைத்தல் அரியாலை | 3.34 | 150 நாட்கள் | C8/C7 | 63 நாட்கள் | 08.07.2021 | 45,000.00 | 07.08.2021 |
| 12. | NPS/2021/ CF/01/WD-12/01 | பெரியதோட்டம் வீதி 7ம் ஒழுங்கையின் வடிகால் அமைத்தல் மற்றும் வீதி புனரமைப்பு அரியாலை | 4.36 | 150 நாட்கள் | C8/C7 | 63 நாட்கள் | 08.07.2021 | 60,000.00 | 07.08.2021 |

தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, கொக்குவில். (C-1975) 2021.04.16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடுப்பனவை மக்களிடமே வழங்குங்கள் பிரதேச சபை உறுப்பினர் கோரிக்கை

**(நெளுக்குளம்) அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற கொடுப்பனவை சேமிப்பில் வைக்குமாறு கோராமல் உடனடி பயன்பாட்டிற்கு வழங்குமாறு வவுனியா தெற்கு பிரதேச சபை உறுப்பினர் துஸ்யந்தன் விக்டர்ராஜ் கோரிக்கை விடுத்துள்ளார்.**

வவுனியாவில் அரசாங்கத்தால் வழங்கப்படும் 5ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை சமுர்த்தி சேமிப்பில் ஈடுபடுமாறு பயனாளர்களிற்கு அறிவுறுத்தப்படுகிறது. இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட சில குடும்பங்களிற்கு வழ்ங்கப்படும் 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை சமுர்த்தி சேமிப்பில் வைப்பிலிடுமாறு சில கிராமங்களில் அறிவுறுத்தப்படுகின்றமை ஏற்க முடியாத செயல்.

குறிப்பாக கொவிட்-19 தொற்றால் தொழிலின்றி பாதிக்கப்படும் குடும்பங்கள் மற்றும் வறுமை கோட்டிற்குட்பட்ட பல குடும்பங்களிற்கு இந்த கொடுப்பனவு பயனுடையதாக இருந்துள்ளது.

இந்நிலையில் வவுனியாவின் சில கிராமப்பகுதிகளில் குறித்த தொகையினை சமுர்த்தி சேமிப்பில் வைப்பிலிடுமாறு உத்தியோகத்தர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக பொதுமக்கள் பல்வேறு முறைப்பாடு களை வழங்கியிருந்தனர். மக்களின் உடனடி பயன்பாட்டிற்கு வழங்கப்பட்ட அந்த நிதியினை சேமிப்பில் வைப்பிலிடுமாறு கோருவது முறையற்ற செயல்.

எனவே இது தொடர்பாக வவுனியா பிரதேச செயலாளரின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளதுடன் அந்தப் பணத்தினை பொதுமக்களின் உடனடி பயன்பாட்டிற்கு வழங்குமாறு கேட்டுள்ளேன். அவர் அதனை நடைமுறைப்படுத்துவதாக உறுதியளித்துள்ளதாக மேலும் தெரிவித்தார்.(5-6-299)

# கால்நடைகளை கட்டுப்படுத்துமாறு கமக்கார அமைப்பு அறிவிப்பு

(அக்கராயன்)

அக்கராயன் குளத்தின் கீழான சகல கால்நடைகளையும் கட்டுப்படுத்தும்படி நாகதம்பிரான் கமக்கார அமைப்பின் தலைவர் சி.கனகசபாபதி அறிவித்துள்ளார். நேற்று முன்தினம் முதல் கால்நடைக் கட்டுப்பாடுகள் தொடங்கி உள்ளதாகவும் சிறுபோக நெற்செய்கையில் பள்ளமான காணிப் பகுதிகளில் விதைப்புகள் நிறைவு பெற்றுள்ளன.

எனவே கால்நடை வளர்ப்பாளர்கள் தமது கால்நடைகளை பயிர்ச் செய்கை நிலங்களுக்குள் விட வேண்டாம் எனவும் கால்நடைகளைக் கட்டுப்படுத்தி சிறுபோக நெற்செய்கைக்கு ஒத்துழைப்பு வழங்கும்படியும் அறிவித்துள்ளார்.


இதேவேளை அக்கராயன் பிரதேசத்தில் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட கால்நடைகள் காணப்படுகின்ற போதிலும் இக்கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் இனங்காணப்படாததன் காரணமாக கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்துவதில் கால்நடை வளர்ப்பாளர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

திருமுறிகண்டி, அக்கராயன், வன்னேரிக்குளம் வீதியில் தற்காலிக மேய்ச்சலுக்கு இனங்காணப்பட்ட இடங்களில் கூடுதலாக பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்படுவதன் காரணமாக கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்துவதிலும் கால்நடை வளர்ப்பாளர்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

(5-6-350)

# இந்திய மீனவர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு பெற வேண்டும்

## செல்வம் எம்.பி.



(மன்னார்)

இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கை கடற்பரப்பில் நுழைந்து மீன் பிடிக்கும் நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே இலங்கை-இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க கடற்றொழில் அமைச்சர் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரிலுள்ள அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் கடற் பிராந்தியத்தில் உள்ள பவளப் பாறைகள் இந்திய இழுவைப்படகுகளினால் அழிக்கப்படுகின்றன.

மீன் உற்பத்தியாகும் இடமாக குறித்த பாறைகள் உள்ள நிலையில் அவை அழிக்கப்படுகின்றது. எனவே இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பகுதியில் நுழைந்து மீன் பிடியில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ள ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைகளை ஊக்குவிப்பது சிறந்ததாக அமையும்.

இரண்டு சமூகங்களுக்கு இடையிலும் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்ற நடவடிக்கைகளில் யாரும் ஈடுபடக் கூடாது என அவர் தெரிவித்தார்.

(5-6-285)

# கிளி.வைத்தியசாலைக்கு பணிப்பாளர் நியமனம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு இது வரை நிரந்தரமான ஒரு பொறுப்பு வைத்தியதிகாரி இன்றி இயங்கி வருகின்றது. குறிப்பாக இந்த வைத்தியசாலையில் கடமையாற்றிய பணிப்பாளர் கடந்த ஆண்டு மேற்படிப்புக்காக சென்ற நிலையில் அந்த வெற்றிடத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட வைத்தியசாலையின் பணிப்பாளரும் மேற்படிப்புக்காக செல்கின்ற நிலையில் வைத்தியசாலை பணிப்பாளர் இல்லாத நிலை காணப்பட்டது.

இந்நிலையில் நேற்று கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கான பணிப்பாளராக வைத்திய கலாநிதி எஸ்.சுகந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்தகால யுத்தம் காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை கடந்த 2010 ஆம் ஆண்டு சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ள போதும் இதுவரை நிரந்தரமான பணிப்பாளர் யாரும் நியமிக்கப்படாத நிலையில் இதுவரை 12 பேர் வரையில் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டனர்.

பல்வேறு கட்டுமான தேவைகளையும் வைத்தியத்துறை நோக்கிய அபிவிருத்தியையும் வைத்திய சேவையினை வழங்கும் குறித்த வைத்தியசாலைக்கான நிரந்தரமான பணிப்பாளர் ஒருவரை நியமிக்குமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த நிலையிலேயே நேற்று கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் சேவையாற்றிய வைத்தியர் எஸ்.சுகந்தன் மாவட்ட பொது வைத்தியசாலைப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(5-6-315)




# வீதி விதி மீறல் குற்றச்சாட்டில் பொலிஸாரால் ஐவர் கைது

(நெளுக்குளம்)

வவுனியா போக்குவரத்து பொலிஸாரால் புதுவருட தினத்தன்று மது போதையில் வாகனங்களை செலுத்திய குற்றச்சாட்டில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா தலைமை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி ரொஷான் சந்திரசேகர தெரிவித்துள்ளார்.

வவுனியா தலைமை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவினரால் நகரப்பகுதிகளில் புதுவருட தினத்தன்று விசேட நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மதுபோதையில் வாகனம் செலுத்துதல் மற்றும் வீதிஒழுங்குகளை பேணாமல் வாகனம் செலுத்துபவர்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அந்தவகையில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 5 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களது வாகனங்களும் பறிமுதல்செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (5-6-299)

# சட்டவிரோத மீன்பிடி அதிகரிப்பு; கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்

## கடற்றொழிலாளர்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு கடலில் சட்டவிரோத கடற்றொழில்கள் கூடுதலாக இடம் பெறுவதாக கடற்றொழிலாளர்களினால் தெரிவிக்கப்படுகிறது.

சுருக்கு வலைத் தொழிலுக்கு அனுமதிக்கப்படாத நிலையில் சிலர் சுருக்கு வலைகளைப் பயன்படுத்தி நெத்தலி, அயலக்கும்புளா, சின்னக்கீரை மீன் போன்ற மீன்களை பிடித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கடந்த செவ்வாய்க்கிழமை புதுமாத்தளன் கடற்பகுதியில் 40 ஆயிரம் கிலோ கிராம் மீன்களை சுருக்கு வலை மூலம் பிடித்து விற்பனை செய் யப்பட்டதாகவும் இது தொடர்பாக கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் சட்டவிரோத கடற்றொழில்களைக் கட்டுப்படுத்துவதற்கு கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் நடவடிக்கை எடுப்பதில்லை எனக் கடற்றொழில் அமைச்சரிடம் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன.

வெளிச்சம் பாய்ச்சி தொழில் செய்தல், சுருக்கு வலை உட்பட சட்டவிரோத தொழில்கள் முல்லைத்தீவில் அதிகரித்திருப்பதன் காரணமாக சட்டத்தினை மதித்து நேர்மையாக தொழில் செய்கின்ற கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தினை சட்டவிரோத தொழில்கள் பாதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக இம்மாவட்டத்தின் உயரதிகாரிகள், கடற்றொழில் அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (5-6-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசிபலன்

16.04.2021
சித்திரை 03, வெள்ளிக்கிழமை
சதுர்த்தி பிற்பகல் 4.19 மணிவரை
ரோகினி முன்னிரவு 9.47 மணிவரை
சுபநேரம் 6.04-7.34 மணிவரை
இராகுகாலம் 10.34-12.04 மணிவரை
சந்திராஷ்டமம்: சுவாதி, விசாகம்
சதுர்த்தி விரதம்

வளவன்


மேஷம்
வீட்டுத்தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.


ரிஷபம்
வழிபாட்டு சிந்தனை மேலோங்கும் நாள், பல நாட்களாக பார்க்காமல் இருந்த உறவினர் ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்பு உண்டு, பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம்.


மிதுனம்
வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுபகாரியச் செலவுகள் இடம்பெறலாம், தொழிலில் கூடுதல் பொறுப்புக்கள் வந்து சேரலாம்.


கடகம்
விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெற லாம், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.


சிம்மம்
தொழில் முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்லும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், போசன நன்மையுண்டு.


கன்னி
வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், தொழிலில் இருந்த எதிர்ப்புக்கள் விலகும், ஆன்றோர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், பயணங்களால் பலனுண்டு.


துலாம்
எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், பண விரயங்கள் மேலோங்கும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


விருச்சிகம்
இரவு-பகலாக பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.


தனுசு
இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், உடல் நலன் சீராகும், செய் தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களை செய்வீர்கள்.


மகரம்
புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும்.


கும்பம்
தாய்வழி ஆதரவு கிடைக்கும் வாய்ப்புண்டு, மனதில் தோன்றுவதைச் செய்வீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.


மீனம்
பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

நிழலின் பெருமை வெயிலில் போனால் தெரியும்

# புதிய வகை ஆமை இனம்

## இலங்கையில் இனங்காணப்பட்டது

### சூழலுக்கு இவை பெரும் சவால் என்கிறார் ஆய்வாளர்


(கொழும்பு)

**சுற்றுச் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் ஆமை இனம் ஒன்று இலங்கையில் கண்டறியப்பட்டுள்ளது.**

சிவப்பு மார்பகத்தை கொண்டுள்ள குறித்த ஆமை இனம், அமெரிக்காவில் இருந்து மீன் இறக்குமதியாளர்களால் நாட்டுக்குக்கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உலகின் பல நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ள இந்த ஆமை இனம் நாட்டில் உள்ள பூர்வீக தாவரங்களுக்கும் விலங்கினங்களுக்கும் தீங்கு விளைவிக்கும் என விலங்கு ஆராய்ச்சி அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த ஆமை இனம் நாட்டினுள் பரவுவதை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலைகள் மற்றும் நீர்வாழ் உயிரினங்கள் தொடர்பிலான ஆய்வாளரான கலாநிதி என் சலம்டி சில்வா வனவிலங்கு திணைக்களத்திடம் கோரியுள்ளார்.




வீடுகளில் வளர்ப்பதற்காக கொண்டு வரப்பட்டுள்ள குறித்த ஆமைகள் தற்போது நாட்டின் பல்வேறு பகுதிகளில் கைவிடப்பட்டுள்ளன.

இந்த ஆமைகள், இலங்கையில் உள்ள சாதாரண ஆமைகளைவிட அதிகளவான உணவுகளை உட்கொள்ளக்கூடியது.

எனவே நீர் நிலைகளில் வாழும் மீன்கள் அவற்றின் முட்டைகள் மற்றும் தாவரங்களை இந்த ஆமைகள் அதிகளவில் உண்ணக்கூடும்.

எனவே எமது சுற்றுச் சூழலுக்கு இவை பெரும் சவாலாக மாறக்கூடும்.

சிவப்பு மார்பகத்தை கொண்டுள்ள குறித்த ஆமைகள், ஐரோப்பிய நாடுகளில் முற்று முழுதாக தடை செய்யப்பட்டுள்ளதாகவும் ஆய்வாளர் என் சலம்டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார். (நி-8)

# சுகாதார வழிகாட்டல்களை தொடர்ந்தும் பின்பற்றுங்கள்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க வெளியிடப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்களை சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டுக்கு பின்னரும் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டுக்குப் பின்னரும் முறையாக மக்கள் பல்வேறு நிகழ்வுகளில் ஈடுபடுவோர்கள் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதுபோன்ற நிகழ்வுகளில் ஈடுபடும்போது மக்கள் சுகாதார வழிகாட்டுதல்களை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும் என தெரிவித்தார்.

எல்லா நேரங்களிலும் முகக்கவசங்களை அணிய வேண்டும் என்றும் அதே நேரத்தில் பொது இடங்களில் சமூக விலகலையும் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

மேலும் சிறப்பு நிகழ்வுகளை நடத்துவதற்கு பொலிஸ் மற்றும் சுகாதார அதிகாரிகளிடமிருந்து முன் ஒப்புதல் பெற்றிருக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதுபோன்ற அங்கீகரிக்கப்பட்ட நிகழ்வுகளில் சுகாதார வழிகாட்டுதல்களை அமுல்படுத்த வேண்டும் என்பதுடன், பங்கேற்பாளர்கள் அதை கடைப்பிடிப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (நி-8)

# நுவரெலியாவிற்கு அதிகமான சுற்றுலாப் பயணிகள்

(ஹற்றன்)

புத்தாண்டை முன்னிட்டு நுவரெலியா நகரிற்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக நுவரெலிய மாநகர சபையின் மேயர் சந்தனலால் கருணரத்ன தெரிவித்துள்ளார்.


இதுவரை காலத்தில் இம்முறையே அதிகளவான சுற்றுலாப் பயணிகள் நுவரெலியாவிற்கு வருகை தந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-8)

# தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் நான்கு நாட்களாக ஸ்தம்பிதம்

(கொழும்பு)

கொவிட் நோய்த் தொற்றுக்கு எதிரான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் கடந்த நான்கு நாட்களாக ஸ்தம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 11 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரையில் கொவிட் தடுப்பூசி எவருக்கும் ஏற்றப்படவில்லை என சுகாதார அமைச்சின் தொற்று நோய்




பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 10ஆம் திகதி இறுதியாக 66 பேருக்கு கொவிட் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது என தொற்று நோய்ப் பிரிவினால் வெளியிடப்படும் ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட தாமத நிலைமைகளினால் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை களில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## பேராசை பெரும் நட்டம்



திருவெண்ணெய் நல்லூரில் பேராசைக்காரன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் எந்தப் பொருளை பார்த்தாலும் அதைத் தான் அடைய வேண்டும் என நினைப்பான்.

எனவே, நாளடைவில் பார்த்தசாரதி என்ற அவனுடைய பெயரே மறைந்து போய் பேராசைக்காரனாயிற்று.

ஒரு நாள், வெளியூருக்கு வியாபார நிமித்தமாக வண்டியில் சரக்குகளை ஏற்றிக் கொண்டு சென்றான்.

வியாபாரம் முடிந்து காட்டு வழியாக வந்து கொண்டிருந்தான். தண்ணீர் வேட்கை கொண்ட அவன் கண்களுக்கு கிண்று ஒன்று தெரிந்தது. வண்டியை விட்டு இறங்கிய அவன் அந்தக் கிணற்றருகே சென்றான். ஒரு பாத்திரத்தில் கயிற்றைக் கட்டி அதை கிணற்றுக்குள் விட்டுத்தண்ணீர் எடுக்கத்தொடங்கினான்.

கிணற்றுக்குள் இருந்து "யார் இங்கே தண்ணீர் எடுப்பது?" என்ற பயங்கரமான குரல் கேட்டது.

அஞ்சி நடுங்கிய அவன் கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தான். உள்ளே யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. நடுங்கும் குரலில், "ஐயா! நான் ஒரு ஏழை. தண்ணீர் குடிப்பதற்காக இங்கு வந்தேன். நீங்கள் யார்?" என்று கேட்டான்.

"விரும்பியதை எல்லாம் கொடுக்கும் மந்திரக் கிணறு இது. இதைப் பாதுகாக்கும் பூதம் நான். யார் கண்ணுக்கும் நான் தெரியமாட்டேன்" என்றது அந்தக் குரல்.

"மந்திரக்கிணறா! விரும்பியதை எல்லாம் தருமா?" என்று வியப்புடன் கேட்டான் அவன்.


"உன்னிடம் பொற்காசுகள் உள்ளதா? ஒரு பொற்காசை இந்தக் கிணற்றுக்குள் போடு உன் விருப்பம் எதுவானாலும் கேள். உடனே அது நிறைவேறும். நன்றாக நினைவு வைத்துக் கொள். இரண்டு முறை தான் இந்தக் கிணறு உன் எண்ணத்தை நிறைவேற்றும்," என்றது அந்தக் குரல்.

"என்னதான் நடக்கிறது பார்ப்போமே" என்ற எண்ணத்தில் ஒரு பொற்காசை கிணற்றுக்குள் போட்டான்.

"விலை உயர்ந்த நகைகளாலும் பொற்காசுகளாலும் என் வண்டி நிரம்ப வேண்டும்.." என்றான் அவன்.

ஒரு நொடிக்குள் அவன் வண்டி பொற்காசுகளாலும் நகைகளாலும் நிரம்பி இருந்தது. இதைப் பார்த்து வியப்படைந்தான் அவன். (தொடரும்)

# மகாபாரதம்




அப்படியானால் என் வாலை ஒரு புறமாக நகர்த்தி விட்டுப் போ என்றது குரங்கு. ஆனால். பீமனால் குரங்கின் வாலை அசைக்க முடியவில்லை. பீமன் தன் இயலாமையை எண்ணி வருந்தினான்.

"என்னைத் தோல்வியுறச் செய்த நீர் யார்? சர்வ வல்லமை படைத்த நாராயணனா? அல்லது சிவபெருமானா?" என பீமன் கேட்டான்.

விரைந்து எழுந்த மாருதி பீமனை ஆரத் தழுவி "தம்பி...நானும் வாயுவின் குமாரன் தான்" என அனுமன் தன்னைப் பற்றிக் கூறினான்.

ராமாவதாரக் காலத்தில் அஞ்சனைக்குப் பிறந்த வாயுமகன் அனுமன் தன் தம்பி முறையான பீமனை தழுவிக் கொண்டான். பீமன் புதியதோர் ஆற்றல் பெற்றான்.

"உன் எதிரிகளால் உன்னை ஒன்றும் செய்ய முடியாது" என்று அனுமன் ஆசி கூற, பீமன் மலர்களுக்கான பயணத்தைத் தொடர்ந்து குபேரனது தோட்டத்தில் அம்மலர்களைக் [illegible] அதைப் பறிக்க முயன்ற போது அங்கிருந்த அரக்கர்கள் அவனை தடுக்க அனைவரையும் பீமன் தோற்கடித்தான். குபேரனுக்கு தகவல் பறந்தது.

தம்மைப் பிரிந்து சென்ற பீமன் வராததால் தருமர் கவலையில் [illegible] நினைக்க அவன் தருமர் முன் தோன்றினான். "உன் தந்தை இருக்குமிடத்திற்கு எங்களையும் அழைத்துப்போ" என்று அவர் கூற கடோத்கஜன் அனைவரையும் தன் தந்தை இருக்குமிடம் தூக்கிச் சென்றான். தம்பியைக் கண்ட தருமர் அமைதியானார்.

அவர்களைக் காண குபேரன் தானே மலர்களுடன் வந்து சேர்ந்தான்.

பின் அனைவரும் பத்ரிகாச்ரமத்திற்குத் திரும்பினர். சடாசரன் என்னும் அரக்கன் திரௌபதியைக் கவரும் எண்ணத்துடன் அவர்களிடம் வந்தான்.

ஒரு சமயம் பீமன் வெளியே சென்ற போது அவ்வரக்கன் தன் சுயரூபத்தை எடுத்துக்கொண்டு தருமர், நகுலன், சகாதேவன், திரௌபதி ஆகியோரைத் தூக்கிக் கொண்டு ஓடினான்.

அப்போது வந்த பீமன் இது கண்டு அவனுடன் போர் புரிந்து அவனைத் தூக்கித் தரையில் எறிந்து தேய்த்துக் கொன்றான்.

சடாசுரனை வதைத்த பின் பாண்டவர்கள் முனிவர்களுடன் இமய உச்சியை அடைந்தனர். அங்கு சாரணர், சித்தர் ஆகியவர்களைக் கண்டு வணங்கினர்.(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நைஜரில் தொடக்கப்பள்ளியில் பாரிய தீ விபத்து

# 20 மாணவர்கள் உடல் கருகிப்பலி!

(நியாமி)

**நைஜரில் பள்ளியில் ஏற்பட்ட தீயின் கோரப் பிடியில் சிக்கி 20 மாணவர்கள் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர். அவர்கள் அனைவரும் 7 முதல் 13 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் ஆவர்.**



மேற்கு ஆபிரிக்க நாடான நைஜரின் தலைநகர் நியாமியில் தொடக்கப்பள்ளி ஒன்றில் இங்கு சில வகுப்பறைகள் பள்ளி கட்டடத்துக்குள்ளும், சில வகுப்பறைகள் பள்ளிக்கு வெளியே வைக்கோலால் செய்யப்பட்ட குடிசைகளிலும் நடந்து வந்தன.


இந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இங்கு வழக்கம் போல் வகுப்புகள் நடந்து கொண்டிருந்தன.

அப்போது சற்றும் எதிர்பாராத வகையில் பள்ளிக் கூடத்தில் திடீரென தீப்பிடித்தது. மிக விரைவாக கொழுந்துவிட்டு எரிந்த தீ பள்ளி முழுவதும் பரவியது.

இதுபற்றி தகவல் அறிந்து வந்த தீயணைப்பு வீரர்கள் நீண்ட நேரம் போராடி தீயை அணைத்தனர்.

எனினும் தீயின் கோரப் பிடியில் சிக்கி 20 மாணவர்கள் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர். அவர்கள் அனைவரும் 7 முதல் 13 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் ஆவர். (நி-8)

# ஆபிரிக்க நாட்டில் அகதிகள் படகு கடலில் கவிழ்ந்து 42 பேர் பலி



(ஜிபூட்டி)

உள்நாட்டு போர் மற்றும் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ள ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக செல்கின்றனர்.

இவர்களில் பெரும்பாலனோர் கடல் மார்க்கமாக பயணம் செய்து ஐரோப்பாவை அடைய முற்படுகின்றனர்.

ஏமனை சேர்ந்த 60-க்கும் மேற்பட்ட அகதிகள் படகு ஒன்றில் ஐரோப்பா நோக்கி புறப்பட்டனர். இவர்களில் பெண்கள் சிறுவர்களும் அடங்குவர்.

அகதிகளின் இந்த படகு வடகிழக்கு ஆபிரிக்க நாடான ஜிபூட்டி அருகே கடலில் சென்று கொண்டிருந்த போது சற்றும் எதிர்பாராத விதமாக கடலில் கவிழ்ந்தது.

இந்த விபத்து குறித்த தகவல் கிடைத்ததும் ஜிபூட்டி நாட்டின் கடலோர பொலிஸ் படையினர் உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்தனர். ஆனால் அவர்கள் செல்வதற்குள் பெண்கள் சிறுவர்கள் உட்பட 42 பேர் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர்.

அதே சமயம் நீரில் தத்தளித்துக் கொண்டிருந்த 14 பேரை கடலோர பொலிஸ் படையினர் மீட்டனர். மேலும் இந்த விபத்தில் சுமார் 10 பேர் மாயமாகி உள்ளனர்.

அவர்களை தேடும் பணி முழுவீச்சில் நடந்து வருகிறது. (நி-8)

## கொரோனாவின் கைப்பிடியில் சிக்கிய இந்தியா

(டில்லி)

இந்தியாவில் கொரோனா தொற்றானது நேற்று முன்தினம் 2 இலட்சத்து 739 பேருக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது. அன்றைய தினமே ஆயிரத்து 38 பேர் மரணம் அடைந்துள்ளனர். இதுவரை தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1 கோடியே 40 இலட்சத்து 74 ஆயிரத்து 564 ஆக உயர்ந்துள்ளது. அத்துடன் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1 இலட்சத்து 73 ஆயிரத்து 123 ஆகவும் உயர்ந்துள்ளது. (நி-8)

**உலகளவில் கொரோனா**

உயிரிழப்பு :-138 281 341

தொற்று :-2 984 984

(நேற்றைய நிலவரம்)

## அமெரிக்க படையினரை ஆப்கானிலிருந்து திரும்பப் பெறுவதாக பிடன் உறுதி

(வோஷிங்டன்)

ஆப்கானிஸ்தானில் போர் என்பது ஒருபோதும் ஒரு பன்முகத்தன்மை வாய்ந்த செயலாக இருக்கக்கூடாது என்று அறிவித்த ஜனாதிபதி ஜோபிடன் செப்டெம்பர் 11க்குள் அனைத்து அமெரிக்க படையினரையும் ஆப்கானிலிருந்து திரும்பப் பெறுவதாகவும் கூறினார்.

நேற்று முன்தினம் புதன்கிழமையன்று வெள்ளை மாளிகையில் ஆற்றிய உரையொன்றின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

உலக வர்த்தக மையம் மற்றும் பென்டகன் மீதான பயங்கரவாதத் தாக்குதல்களுக்குப் பின்னர் இரண்டு தசாப்தங்களுக்குப் பிறகு அமெரிக்கப் படையினர் ஆப்கானில் தங்கியிருப்பதை இனி நியாயப்படுத்த முடியாது. 20 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு பயங்கரமான தாக்குதலால் நாங்கள் ஆப்கானிஸ்தானுக்குச் சென்றோம். இனியும் ஆப்கானிஸ்தானில் எங்கள் இராணுவ இருப்பை விரிவுபடுத்துவதற்கான அல்லது விரிவாக்கும் சுழற்சியைத் தொடர முடியாது.

நாங்கள் எங்கள் படையினரை திரும்பப் பெறுவது சிறந்த நிலைமைகளை உருவாக்கும் என்று நம்புகிறோம் என்றார்.

அமெரிக்க படையினரை திரும்பப் பெறும் செயல்முறை எதிர்வரும் மே 1 ஆம் திகதி தொடங்கும் என்றும் பிடன் கூறினார்.

நேட்டோ படையினர் மே 1 முதல் ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறுவார்கள் என்று நேட்டோ பொதுச் செயலாளர் ஜென்ஸ் ஸ்டோல்டென்பேர்க் புதன்கிழமை தெரிவித்தார்.

அமெரிக்க ஆதரவு மற்றும் தலைமையை நம்பியுள்ள சுமார் 7 ஆயிரம் அமெரிக்கர் அல்லாத நேட்டோ படைகள் ஆப்கானில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

## அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசியை நிரந்தரமாக கைவிட்ட டென்மார்க்

(ஹோபென்ஹெஜென்)

கொவிட்-19 தடுப்பூசியான அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசி பயன்பாட்டை டென்மார்க் நிரந்தரமாக கைவிட்டுள்ளது.

குறித்த ஊசியால் பலருக்கு பக்க விளைவுகள் ஏற்பட்டுள்ளதாக அந்த நாட்டு சுகாதார ஆணைக்குழுவை மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அஸ்ட்ரா-ஜெனெகா தடுப்பூசி செலுத்தப்பட்டவர்களில் பலருக்கு தீவிர இரத்த உறைவு ஏற்பட்டுள்ளதாக டென்மார்க்சுகாதார ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி-8)

## 50 வயதுக்கு மேற்பட்டோர்க்கு ஜூலை இறுதிக்குள் தடுப்பூசி

(லண்டன்)

எதிர்வரும் ஜூலை மாத இறுதிக்குள் பிரித்தானிய சனத் தொகையில் 50 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் முதலாவது கொரோனா தடுப்பூசி செலுத்தி முடிக்கப்படும் என பிரித்தானிய பிரதமர் போரிஸ் ஜோன்சன் தெரிவித்தார்.

மொடர்னா தடுப்பூசியை செலுத்தும் நடவடிக்கையை பிரித்தானியா தற்போது ஆரம்பித்துள்ளது. இந்த தடுப்பூசி வழங்கும் செயற்பாட்டில் வயோதிபர்களுக்கு மேலதிகமாக சுகாதாரப் பணியாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. (நி-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு வழங்கும்

# போர்வீரன் ஈக்கள் (Black Soldier Fly); ஓர் நிலையான எதிர்காலத்திற்கான கைத்தொழில் புரட்சி

(தொடர்ச்சி)

**போர்வீரன் ஈக்களின் பண்ணை வளர்ப்பு [Block Soldier Fly farming]**

பூச்சியியல் வல்லுநர்கள் பல தசாப்தங்களாக போர்வீரன் ஈக்கள் பற்றி அறிந்திருந்த போதும் பண்ணை ரீதியான வளர்ப்பு இருபதாம் நூற்றாண்டிலேயே தொடங்கப்பட்டது.பண்ணை வளர்ப்பின் போது ஆரம்பத்தில் குறித்த இடத்தில் போர்வீரன் ஈக்களின் குடம்பிப் பருவங்களின் உருவாக்கத்தைத் தூண்டுவதற்கு அவற்றினுடைய முட்டைகளோ/ குடம்பிகளோ தேவைப்படுகின்றன. எனவே இவ் ஈக்களை கவர்ந்திழுப்பதற்காக வீட்டுச் சமையல் கழிவுகள் அதா வது மரக்கறி மற்றும் அழுகிய பழங்கள், பழைய உணவுகள், துருவிய தேங்காய்ப்பூ தானியங் களின் கோதுகள், அல்லது சந்தைகளில் கழித்தொதுக்கப்படும் பழங்கள் மற்றும் மரக்கறி போன்றவற்றை ஓர் வாளியிலோ சாதாரண ஓர் மரப்பெட்டியிலோ இட்டு சிறிய துவாரங்கள் கொண்ட மூடி யால் அடைப்புச் செய்தல் வேண் டும். இதனை நோக்கி கவர்ந் திழுக்கப்பட்ட போர்வீரன் ஈக்கள் அவ்வுணவு முதலுக்குச் சற்று மேலாக உள்ள வாளி / மரப்பெட் டியின் மேற்பரப்பில் கூட்டமாக முட்டைகளை இடுகின்றன.

நிறையுடலிகள் பொதுவாக இனப்பெருக்கத்தை மேற்கொள்வதற்கும் முட்டைகளை இடுவதற்கும் ஏறத்தாழ 24°C- 40°C வெப்பநிலையும், சாதாரணமாக நேரடியற்ற சூரியஒளியும், 70% ஆன ஈரப்பதனும் சாதகமானது. உணவு மூலத்தின் பிரிகையாக்கத்தினால் பிறப்பிக்கப்படும் வெப்பநிலையும், அதனால் உருவாக்கப்படும் ஈரப்பதன் மிக்க சூழ்நிலையும் குடம்பிகளின் வளர்ச்சிக்கு உகந்ததாக இருப்பினும் கூட்டுப்புழுவாக மாறும் நிலையில் இவை வளர்ப்பு ஊடகத்தில் இருந்து உலர்ந்த பகுதியை நோக்கி இடம்பெயரும். இதுவே இவற்றின் அறுவடைக்குரிய உகந்த நேரமாகும்.

**போர்வீரன் ஈக்களை பண்ணைகளில் வளர்ப்பதால் ஏற்படும் நன்மைகள்**

**சுற்றுச்சூழலில் பங்களிப்பு**

பண்ணை வளர்ப்புகளில் போர்வீரன் ஈக்கள் பல்வேறு வகைகளில் மனிதனுக்கு துணை புரிகின்றன.


கழிவு முகாமைத்துவம் பாரிய சவாலாக அமைந்திருக்கும் இக் காலக்கட்டத்திலே மிக முக்கியமான சூழலியல் நன்மையாக உயிர்க் கழிவு (Biowaste) முகாமைத்துவதில் BSFL முக்கிய பங்காற்றுகின்றன. இவை தமது போசணைச் செயற்பாட்டினால் சேதன கழிவுகளில் அதிகரித்த நிறையையும், கனவளவையும் மிகக்குறுகிய காலப்பகுதியில் 50-8 வீதமாக குறைவதுடன் இவற்றின் உற்பத்தி எச்சம் (Black Soldier Fly Residue) சேதன உரமாக விவசாயத்திற்குப் பயன்படுத்தப் படுகின்றது.

மேலும் இவை மனிதனுக்கு பீடைகளாக தொழிற்படுவதில்லை. வீட்டு ஈக்கள் மற்றும் நீல ஈக்கள் போன்று பீடைகளின் வளர்ச்சியை நிரோதிக்கின்றன. மேலும் வீட்டு ஈக்களைப்போன்று பரந்த பிரதேசங்களுக்கு இடம்பெயரும் இயல்புகளற்றவை. இதனால் BSFL இன் மீள் உருவாக்கம் குறித்த பிரதேசத் தில் நிகழ்வது எளிதாக்கப்படும். மேலும் BSFL இன் தொழிற்பாடு குறித்த உணவு மூலத்தில் ஆரம்பித்தவுடன் Escherichiacoli மற்றும் Salmonella enterica போன்ற நோய் விளைவிக்கும் நுண்ணங்கிகளின் வளர்ச்சி குறைவடைவதாக ஆராய்ச்சியாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

**பொருளாதார முக்கியத்துவம்**

குறைந்த தரமான சேதனக் கழிவுகளை உயர்தர ஊட்டச்சத் துக்களாக மாற்றுவதற்கான BSFL இன் திறனும் அவற்றின் அதிக புரத உள்ளடக்கமும் குறைந்த விலையில் விலங்கு தீவனத்தை உற்பத்தி செய்வதற்கான நிலையான தொழில்நுட்பத்தை உருவாக்க ஒரு மகத்தான வாய்ப்பை வழங்குகின்றது.

போர்வீரன் ஈக்களின் குடம்பி/ கூட்டுப்புழுக்கள் பண்ணைகளில் வளர்க்கப்படும் கோழிகள் போன்ற பறவைகளுக்கு ஒரு இயற்கையான அதிக கல்சியம் மற்றும் புரதங்களைக் கொண்ட உணவு மூலமாகும். இவற்றை தூளாக்கியோ அல்




BSFL- ஓர் எளிய வளர்ப்புத் தொகுதி

லது முழு உலர்ந்த குடம்பிகளாகவோ உணவாக வழங்குவதன் மூலம் கோழிப்பண்ணை உற்பத்தியினை அதிகரிக்கலாம்.

மேலும் பூனைகள் மற்றும் நாய்களுக்கு பொருத்தமான முறையில் பதப்படுத்தி பைக்கற்றுகளில் செல்லப்பிராணிகளுக்குரிய உணவு என்பதை உறுதிப்படுத்தி சந்தைப் படுத்த முடியும். மேலும் இவற்றினை பதப்படுத்தி சிறிய துகள்களாக அரைத்து அலங்கார மீன்களுக்கு உணவாக வழங்கலாம்.

உண விற்காக வளர்க்கப்படும் மீன்களுக்கு நேரடியாகவோ/ பதப்படுத்தியோ உணவாக வழங்க முடியும். BSFL ஐ உணவாக வழங்குவதனால் உயர்போசணைத்தன்மை கொண்ட உணவை செல்லப் பிராணிகளுக்கு கொடுப்பதுடன் நச்சுத்தன்மையற்ற இயற்கை தன்மை நிறைந்த உணவை மிகக் குறைந்த செலவில் வழங்க முடியும்.

இவ்வாறான பலம்மிக்க வரலாற்றினை அடிப்படையாக கொண்ட போர்வீரன் ஈக்களின் குடம்பி உற்பத்தி இந்தியா, தாய்லாந்து, சீனா போன்ற நாடுகளில் பாரிய ஆலைத் தொழிலாக உருவெடுத் துள்ள நிலையில் இவ் உற்பத் தியை எமது நாட்டிலும் வெற்றிகர மாக மேற்கொள்வதில் சிரமம் ஏதும் காணப்படுவதாக தெரிய வில்லை.

ஆகவே இவ்வகையான உற்பத்திகளை மேற்கொள்வதற்கு இவ்வாறான கைத்தொழில்களை ஊக்குவிக்கும் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மக்களுக்கு உதவி செய்ய முன்வர வேண்டும் என்பதே எனது கருத்தாகும்.

இலங்கை போன்ற குறைந்த மற்றும் நடுத்தர வருமானமுள்ள வெப்பமண்டல நாடுகளின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதில் போர்வீரன் ஈக்களின் குடம்பிகளின் உற்பத்தி அடிப்படையிலான தொழில்நுட்பம் குறிப்பிடத்தக்க பங்களிப்புச் செய்யும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை!

**கோகிலா சிவபாலகிருஷ்ணன்**
**விரிவுரையாளர்**
**விலங்கியல் துறை**
**யாழ். பல்கலைக்கழகம்**

(முற்றும்.)

# தனித்தா? இணைந்தா? மே தின நிகழ்வு

## தீர்மானிக்கவில்லை என்கிறது சு.க

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொழிலாளர் தினத்தை தனித்து நடத்துவதா அல்லது ஏனைய கட்சிகளுடன் இணைந்து மேற்கொள்வதா என இதுவரை தீர்மானிக்கவில்லை என கட்சியின் உபதலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஷான் விஜயலால் சில்வா தெரிவித்தார்.

எதிர்வரும் மே தினத்தை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தனித்து கொண்டாட தீர்மானித்திருப்பதாக தெரிவிக்கப்படும் செய்தி தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்.

மே முதலாம் திகதி சர்வதேச தொழிலாளர் தினத்தை நாங்கள் கொண்டாடுவோம். மே தினத்துக்கு மிகவும் விசேடமான கட்சியாவது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியாகும். ஏனெனில் தொழிலாளர் தினத்தை அரச விடுமுறை தினமாக்கியது. தொழிலாளர்களுக்கு பாரியளவில் வரப்பிரசாதங்களை வழங்கியது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாகும்.

அத்துடன் எதிர்வரும் தொழிலாளர் தின பிரதான நிகழ்வை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியைச் சேர்ந்தவர்களுடன் தனித்து மேற்கொள்வதா அல்லது அரசாங்கத்தில் இருக்கும் கட்சிகளுடன் இணைந்து மேற்கொள்வதா என இதுவரை இறுதி தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை.

அதுதொடர்பாகவும் மாகாணசபை தேர்தல் மற்றும் தேர்தல் சட்ட திருத்தம் தொடர்பாகவும் அரசாங்கத்துடன் கலந்துரையாட இருக்கின்றோம். அதன் பின்னரே மே தினம்தொடர்பாக தீர்மானம் எடுப்போம்.

மேலும் மாகாணசபை முறைமைக்கு கட்சி என்றவகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவளிக்கின்றோம். மாகாண சபைகள் மக்கள் பிரதிகளுடனே செயற்படுத்தப்படவேண்டும். மாகாண சபைகள் மூலம் மக்களுக்கு பாரிய சேவையை மேற்கொள்ள முடியுமாகின்றது. அதனால் தற்போதுள்ள மாகாணசபை முறைமைக்கு அப்பாற் சென்று மாவட்ட மத்தியில் அதிகார பரவலாக்கும் முறைமைக்கு நாங்கள் விருப்பம் தெரிவித்திருக்கின்றோம். (நி-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 1939

# நாட்டில் மிகவும் வறட்சியான நிலைமை நீர் வழங்கலில் சிக்கல் இருந்தால் அழையுங்கள்

(கொழும்பு)

**நிலவும் வறட்சியான வானிலை காரணமாக நாடளாவிய ரீதியில் நீர் வழங்கல் பாதிக்கப்படக்கூடும் என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை தெரிவிக்கின்றது.**

நாட்டில் மிகவும் வறட்சியான நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக நீர் நிலைகளில் உள்ள நீர் மட்டம் குறைந்து வருவதாகவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை நீர் வழங்கல் தொடர்பாக ஏதேனும் சிக்கல் இருந்தால், தயவு செய்து 1939 என்ற எண்ணை அழைக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி-8)

# பங்காளிக் கட்சிகளுக்கிடையில் கருத்து முரண்பாடு விரைவில் தீர்வு என்கின்றார் பிரதமர் மகிந்த

(கொழும்பு)

மே தினக் கொண்டாட்டம் மற்றும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான கூட்டணியில் உள்ள பங்காளிக் கட்சிகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகளுக்கு விரைவில் தீர்வை எட்டலாம் எனத் தான் நம்புவதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

"ஏப்ரல் 19 ஆம் திகதி நடைபெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்துக்கு அனைத்துக் கூட்டணி கட்சிகளின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஒரு அரசியல் கூட்டணியின் உறுப்பினர்கள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் தங்களுடைய சொந்த நிலைப்பாடுகளையும் கருத்துக்களையும் வைத்திருப்பது இயல்பானது.

இது புதியதொன்றல்ல. அந்த அடிப்படையில் கூட்டணிக் கட்சிகள் பிரச்சினைகள் குறித்து தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தக்கூடும். அப்படிக் கூறுவதால் கூட்டணியின் ஒற்றுமைக்கு அச்சுறுத்தல் இருப்பதாக அர்த்தமல்ல" என்றும் அவர் குறிப்பிட்டார். (நி-8)

# 24 மணித்தியாலங்களில் 123 விபத்துக்கள் பதிவு

## •10 பேர் உயிரிழப்பு
## •77 பேர் காயம்

(கொழும்பு)

நாட்டில் நேற்று வியாழக்கிழமை காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரப் பகுதியில் வீதி விபத்துக்கள் காரணமாக பத்து மரணங்கள் பதிவாகியுள்ளன.

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டின் போது விபத்துக்கள் கணிசமாக அதிகரித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் 12 விபத்துக்கள் பதிவாகியுள்ளதாகவும் இதில் ஒருவர்காயமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் இந்த காலகட்டத்தில் நாட்டில் மொத்தம் 123 விபத்துக்கள் பதிவாகியுள்ளன என்றும் அவற்றில் 77 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவித்தார்.

இந்த விபத்துக்கள் அனைத்தும் பொலிஸில் பதிவாகிய விபத்துக்கள் என்றும் இந்த நிலையில் பதிவு செய்யப்படாத சம்பவங்கள் அதிகமாக இருக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விபத்துக்களில் 53 மோட்டார் சைக்கிள்கள். 30 முச்சக்கர வண்டிகள் மற்றும் ஏனைய வாகனங்கள் சிக்கியுள்ளன.

விபத்துக்களில் தொடர்புடைய வாகனங்களின் சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-8)

# தேசியப்பட்டியல் ஊடாக பாராளுமன்றம் செல்கிறார் ரணில்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் கிடைக்கப்பெற்றுள்ள தேசியப்பட்டியல் ஊடாக கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றம் செல்ல உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைத்த ஒரே ஒரு தேசியப் பட்டியல் ஆசனம் இதுவரை வெற்றிடமாக காணப்பட்டு வருகிறது.

பாராளுமன்றத் தேர்தல் நிறைவு பெற்று எட்டு மாதங்கள் கடந்த நிலையில் குறித்த நியமனத்தின் ஊடாக பாராளுமன்றம் செல்பவரை தீர்மானிக்க முடியாது இழுபறி நிலை நீடித்து வருகிறது.

இந்நிலையில்தான், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதத்திற்குள் தனது கட்சிக்கு கிடைத்த தேசியப்பட்டியல் ஆசனத்தை ஏற்றுக் கொள்வார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

காலி பகுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய போதே ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன இவ்வாறு தெரிவித்தார். (நி-8)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# உடம்புக்குள் ஒரு போட்டி!

"யார் பெரியவன்?"

இது உலகம் முழுவதும் நடந்து கொண்டிருக்கின்ற ஒரு போட்டி. இரண்டு நாடுகளுக்கு மத்தியில் இந்தப் போட்டி உண்டு. இரண்டு மனிதர்களுக்கு இடையில் இந்தப் போட்டி உண்டு.

சரி ஒரு மனிதனுக்குள்ளேயே இது மாதிரி ஒரு போட்டி வந்தால் அது எப்படி இருக்கும்? அப்படிப்பட்ட ஒரு கற்பனை இது. ஐம்பொறிகளுக்குள்ளே யார் பெரியவன். என்கின்ற போட்டி வந்துவிட்டதாம்.உடனே கடவுளிடம் போய் முறையிட்டார்களாம்.பேசும் சக்தி இருக்கே...அது என்ன சொல்லியது தெரியுமா?

ஒரு மனிதன் தனக்கு என்ன வேண்டும் என்பதைக்கேட்டுத் தான் வாங்குகின்றான். பேசினால்தான் அவன் தன்னுடைய தேவைகளை அடுத்தவர்களிடம் சொல்ல முடியும்.

இன்றைக்கு எதையும் கேட்டு வாங்கித் தான் உயிர் வாழ வேண்டியிருக்கிறது. பேச்சு இல்லை என்றால் எல்லாம் போச்சு. அதனால் நான் தான் பெரியவன். என்றது பேசும் சக்தி.

முதலில் ஒரு பொருளைப் பார்த்தால் தான் கேட்க முடியும்.அதனால் பேச்சை விட பார்வை தான் முக்கியம்.ஆகவே நான் தான் பெரியவன் என்றது பார்க்கும் சக்தி.பார்ப்பதைவிட பேசுவதைவிட கேள்வி ஞானம் தான் ஒரு மனிதனை உருவாக்குகின்றது. நம்மைப் பற்றி அடுத்தவன் என்ன பேசுகின்றான் என்பதை கேட்டால் தான் எங்களைத் திருத்திக்கொள்ள முடியும். அதனால் நான் தான் பெரியவன் என்றது கேட்கும் சக்தி.

ஒரு பொருளை பார்த்தாலும் சரி...அது சம்பந்தமாக பேசினாலும் சரி.. கேட்டாலும் சரி.. அதைப்பற்றி சிந்தித்தால் தான் அதற்கு ஏற்ற மாதிரி செயற்பட முடியும்.வந்து சேருகின்ற விடயத்தை அது எப்படிப் பட்டதாக இருந்தாலும் பக்குவப்படுத்திக் கொடுப்பது மனம் தான்.அதனால் நான் தான் பெரியவன் என்றது சிந்திக்கும் சக்தி.

மூச்சுவிடும் சக்தி இருக்கின்றதே.அது எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு சும்மாவே இருந்தது.நீ ஒன்றும் சொல்லவில்லையா? என்று கேட்டார் கடவுள். அது எதுவும் சொல்லாமல் ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு சும்மா இருந்து கொண்டது. கடவுள் யோசனை செய்தார்.பின்பு சொன்னார்.

இதோ பாருங்கள் உங்களுக்குள்ளே யார் பெரியவர் என்பதை முடிவு செய்யலாம். அதற்காக ஒரு சின்ன சோதனை வைக்கின்றேன்.

மனித உடம்பிலேயிருந்து நீங்கள் ஒவ்வொருத்தரும் கொஞ்ச நேரம் பிரிந்து இருங்கள். யார் பிரிந்து இருக்கும் போது மனிதன் மிகவும் சிரமப்படுகின்றானோ அவர்கள் தான் பெரியவர்கள் என்றார்.

சரி என்று எல்லோரும் ஒத்துக் கொண்டார்கள். முதலில் பேசும் சக்தி விலகிப் போனது. ஒரு மாதம் அவனால் பேச முடியாமல் போனது அவ்வளவு தான். உயிர் வாழுவதில் ஒன்றும் சிக்கல் இல்லை. கையாலேயே சைகை காட்டி வேண்டியதை வாங்கி சாப்பிட்டுப் பிழைத்துக் கொண்டான்.

அதன் பின்பு பார்கின்ற சக்தி மட்டும் பிரிந்து போய்விட்டது. மனிதனால் எதையும் பார்க்க முடியவில்லை அவ்வளவு தான். தொட்டுப் பார்த்து வேண்டியதைக் கேட்டு வாங்கிக் கொண்டான்.

அதன் பின்பு கேட்கின்ற சக்தி மட்டும் விலகிப் போனது. ஏனையவர்கள் சொல்வது, பேசுவது அவனுக்குக் காதிலே விழவில்லை. அதனால் பாதுகாப்பாக இருந்தான்.

இதற்குப் பின்பு மனம் விலகிப் போய்விட்டது. மனிதன் சிந்திக்கின்ற சக்தியை இழந்தான். சித்தப்பிரமை பிடித்தவன் போல் உட்கார்ந்திருந்தான். யாரும் அவனை நெருங்கவே இல்லை. ஆனாலும் பரிதாபப் பட்டு சிலபேர் சோறு போட்டுவிடுவார்கள். அவன் பிழைத்துக் கொண்டான்.

கடைசியாக வந்தது மூச்சு விடும் சக்தி. இப்பொழுது அது மனித உடம்மை விட்டு விலக ஆரம்பித்தது.அவ்வளவு தான் கண் பார்வை மங்க ஆரம்பித்தது. காது கேட்கின்ற சக்தியை இழந்தது. பேச முடிய வில்லை. சிந்தனை கலங்கிப் போய்விட்டது. மனிதன் கீழே விழுந்து விட்டான். இப்பொழுது அந்த நான்கு பொறிகளும் கெஞ்ச ஆரம்பித்துவிட்டது. மூச்சுவிடும் சக்தியைப் பார்த்து தயவு செய்து நீ இந்த உடம்மை விட்டுப் போய்விடாதே நீ போய்விட்டால் இந்த உடம்பிற்கு மரியாதை இல்லை.நாங்களும் செயற்பட முடியாது. என்பதைப் புரிந்து கொண்டோம்.நாங்கள் செய்வது வெளியே தெரிகின்றது... உன்னுடைய பெருமை வெளியே தெரிவதில்லை அப்படி என்று எல்லாம் சேர்ந்து கொண்டது.

கடவுளுக்கு இப்பொழுது தீர்ப்புச் சொல்ல வேண்டிய அவசியமே ஏற்படவில்லையாம். சரி.. இந்தக் கதையில் இருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டிய கருத்து என்னவென்றால்...

மிகவும் முக்கியமானவர்கள் எல்லாம் அவர்கள் செய்கின்ற காரியத்திலேயே கருத்தாக இருப்பார்கள். அவர்கள் செய்வதை விளம்பரப்படுத்திக் கொள்வதில்லை. அடக்கமாக செய்யப்படுகின்ற பணி தான் அவசியமான பணியாக அமையும். இது தான் இதிலே உள்ள தத்துவம்.

ஒரு அப்பா தன் பிள்ளையைப் பற்றி மிகவும் பெருமையாக சொல்லிக் கொண்டிருந்தார்.என் பையனும் அப்படித் தான். செய்கின்ற காரியத்திலே கருத்தாக இருப்பான். அவன் செய்வதை விளம்பரப்படுத்திக் கூறுவதில்லை. மிகவும் அடக்கமாக செய்வான் என்றார்.அப்படி என்ன தான் செய்கின்றான்? என்று கேட்டேன். பணத்தை எங்கே வைத்தாலும் எடுத்துவிடுகின்றான் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மீண்டெழுந்த யாழ்ப்பாண பொதுசன நூலகம்

## 15 நூல்களிலிருந்து அதன் வரலாற்றுத் தேடல்

திருமதி.சுகந்தினி சதாசிவமூர்த்தி பிரதம நூலகர், யாழ்ப்பாணம் பொது நூலகம்

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



அந்த அதிர்ச்சியில் ஏற்பட்ட மாரடைப்பால் அவர் உயிரிழந்தார். புத்தகங்களின் பெறுமதி அவருக்குத் தெரியும்.

யாழ்ப்பாண நூலகத்தில் ஊழியராக வேலைசெய்துவரும் பற்குணம் என்பர் நூல் நிலையம் எரிந்த நிலையைக் கண்டு பிரமை பிடித்தவரானார். அவர் ஒரு நாடகக் கலைஞராவார். மூன்று , நான்கு நாட்கள் அவர் சித்தம் குழம்பிய நிலையில் காணப்பட்டார்.

நூல் நிலையம் தீப்பற்றி எரிவதாக அன்றிரவு 10.15 மணியளவில், மாநகரசபை ஆணையாளர் சி.வி.கே. சிவஞானம் அறிய நேர்ந்தது. உடனே மாநகரசபை பவுசர்களையும், மாநகரசபை ஊழியர்களையும் பொதுசன நூலகத்தில் ஏற்பட்ட தீயை மேலும் பரவாது அணைக்குமாறு பணித்தார். தீயை அணைக்கச் சென்றவர்களை துரையப்பா விளையாட்டு அரங்கில் தங்கியிருந்த பொலிஸார் தடுத்தனர் என்பதைக் காவலாளர்கள் கூறியதை அவர் அறிந்தார்.

நூலக எரியூட்டலினால் பெரிதும் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டு இலக்கியவாதி "சுஜாதா" 1981 ஆம் ஆண்டு டிசெம்பர் மாத ஆனந்த விகடன் இதழில் "ஒரு இலட்சம் புத்தகங்கள்" என்கிற தலைப்பில் பாரதி நூற்றாண்டு சிறப்புச் சிறுகதை ஒன்றை எழுதியிருந்தார்.

**நூலக எரியூட்டலினால் பெரிதும் பாதிக்கப்பட்ட தமிழ் நாட்டு இலக்கியவாதி "சுஜாதா" 1981 ஆம் ஆண்டு டிசெம்பர் மாத ஆனந்த விகடன் இதழில் "ஒரு இலட்சம் புத்தகங்கள்" என்கிற தலைப்பில் பாரதி நூற்றாண்டு சிறப்புச் சிறுகதை ஒன்றை எழுதியிருந்தார்.**

### எரியூட்டப்பட்ட செய்தியைக் கேள்வியுற்ற கலாநிதி தாவீது அடிகளின் மறைவு

இலங்கையில் வாழும் எல்லா மக்களிடையேயும் நல்லிணக்கம் ஏற்படவேண்டும் என்பதையே தனது இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்த மாமேதை தாவீது அடிகள் யாழ். பொது நூலகம் என்ற அறிவாலயம் 1981 ஜூன் முதலாம் நாளில் எரியூட்டப்பட்ட செய்தியைக் கேட்டு துயில் கொள்ளச் சென்றவர் மீளாத் துயில் கொண்டார்.


**இலங்கையில்வாழும்எல்லா மக்களிடையேயும் நல்லிணக்கம் ஏற்படவேண்டும் என்பதையே தனது இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்த மாமேதை தாவீது அடிகள் யாழ். பொது நூலகம் என்ற அறிவாலயம் 1981 ஜூன் முதலாம் நாளில் எரியூட்டப்பட்ட செய்தியைக் கேட்டு துயில் கொள்ளச் சென்றவர் மீளாத் துயில் கொண்டார்.**

தமிழறிஞர் கலாநிதி தாவீது அடிகள் என அழைக்கப்படும் வண. சிங்கராயர் தாவீது அவர்கள் ஜூன் 28,1907 இல் பிறந்தவர். இவர் யாழ். நூலகம் எரிக்கப்பட்ட சோகம் தாளாமல் ஜூன் 2, 1981 அதிகாலை அன்று மண்ணை விட்டு மறைந்தார். தாவீது அடிகள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழறிஞர். சொற்பிறப்பியல் ஆய்வாளர். பன்மொழி வித்தகர். யாழ்ப்பாணம் தும்பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட தாவீது அடிகள் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆரம்ப, மற்றும் இடைநிலைக் கல்வியைக் கற்று பின்னர் லண்டன் மெட்ரிக்குலேஷன் சோதனையில் சித்தி அடைந்து அதன் பின் லண்டன் பல்கலைக்கழக இளங்கலைமாணிப் பரீட்சையில் தோற்றி சிறப்புத் தரத்தில் சித்தியடைந்தார்.

தன் தந்தையார் படிப்பித்த யாழ்ப்பாணம் புனித புத்திரிசியார் கல்லூரிலேயே 1936 தொடக்கம் 1967 வரை ஆசிரியராகப் பணியாற்றினார். நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் உந்துதலால் சமஸ்கிருத மொழியைக் கற்று புலமை அடைந்து அதில் முதுகலைமாணிப் பட்டத்தினை லண்டன் பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து கீழைத் தேசத்தில் முக்கியமான மொழிகளையும் மேலைத்தேசத்தில் முக்கிய வாழும் மொழிகளையும் கற்கத் தொடங்கினார். அதனைத் தொடர்ந்து தமிழ்மொழியை மையமாக வைத்து மற்றைய மொழிகளோடு ஒப்பீடு ஆய்வு செய்து, சுவாமி ஞானப்பிரகாசர் ஆரம்பித்து வைத்த ஒப்பீட்டுச் சொற்பிறப்பியல் அகராதிகளைப் பின்பற்றி தானும் ஒப்பீட்டுச் சொற்பிறப்பியல் அகராதிகளை 1970 ஆம் ஆண்டு தொடக்கம் பல பாகங்களாக வெளியிட்டுள்ளார்.

தமிழ் - சிங்கள சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியை 1973ஆம்



எரிந்த நூலகத்தில், வாங்குத்துண்டொன்றில் கவலையுடன் அமர்ந்திருக்கும் நூலகர் திருமதி ரூபா நடராசாவும், நூலக உதவியாளர்களும்

ஆண்டு தமிழிலும், தமிழ், சிங்கள சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியை 1974 ஆம் ஆண்டு ஆங்கிலத்திலும் எழுதி வெளியிட்டார். அந்த ஆய்வில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "இந்த மொழி ஆய்வு நம் நாட்டில் பெரும் பயனைத் தரப் போகின்றது. பயன் மொழிக்கு மட்டுமன்று சிங்கள-தமிழ் இனத்திற்கே நல்ல பயன் அளிக்க இருக்கிறது. எனது ஆய்வு சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளுக்குள்ளும் உள்ள நெருங்கிய தொடர்பை எடுத்துக்காட்டி இரு இன உறவைக் க[illegible]வித்திட்டு தேசிய ஒற்றுமையை கொண்டுவர வல்லது..." இதன் மூலம் மொழிகளிடையே அல்லது வெவ்வேறு மொழிகளைப் பேசுபவர்களிடையே குரோதம், பகைமையுணர்வு வளர்வதை அவர் விரும்பவில்லை எனத் தெரிகிறது.

மொழி ஓர் தொடர்பாடல் கருவி. அது மனித உறவை வளர்க்கப் பயன்படுத்தப்பட வேண்டுமே அன்றி மனிதரை பிரிக்கும் கருவியாக மாறக் கூடாது. மனிதனை மனிதன் மதித்து வாழ்வதற்கே மொழியைப் பயன்படுத்த வேண்டும். இதுவே தாவீது அடிகளின் முக்கிய இலட்சியமாகும்.

இவர் தனது ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வு பெற்றபின் தன் வாழ்க்கையில் இறுதிக் காலத்தில் தான் கற்பித்த பத்திரிசியார் கல்லூரியிலேயே மேல்மாடியில் ஓர் அறையில் தங்கி இருந்தார். 1981 ஜூன் 1 நள்ளிரவில் யாழ்ப்பாணப் பொது நூலகம் எரியூட்டப்பட்ட செய்தியைக் கேள்வியுற்ற பின் அடிகளார் உறக்கத்திற்குச் சென்றார். நித்திரைக்குச் சென்ற அவர் அடுத்தநாள் 1981 ஜூன் 2 விடியற்காலை காலமானார். நூலகம் எரியூட்டப்பட்ட செய்தியைக் கேட்ட அதிர்ச்சியினாலேயே அடிகளார் உயிர் நீத்தார் என்று சுட்டிக்காட்டப்பட்டது. யாழ்.நூலகம் அழியாத நெருப்பு நினைவுகளை சந்ததி கடந்தும் ஏந்தி நிற்கும். அந்த வலிகளை நினைக்கும் ஒவ்வொரு ஆண்டிலும் யாழ்.நூலக எரியூட்டலின் வேதனை தாங்காமல் உயிர் நீத்த தாவீது அடிகள் நினைவுகளும் நெஞ்சில் நிறைந்திருக்கும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச் செயல்களைத் தடுக்க இலங்கையுடன் கைகோர்த்தது அவுஸ்திரேலியா




(கொழும்பு)

கடல் மார்க்கமாக அவுஸ்திரேலியாவிற்கு முன்னெடுக்கப்படும் சட்டவிரோத குடியேற்றம் மற்றும் மனித கடத்தலைத் தடுப்பதற்காக ட்ரோன் கமரா தொழில்நுட்பம் மூலம் கண்காணிப்பு நடவடிக்கையினை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக இறையாண்மை எல்லை நடவடிக்கை தொடர்பான ஒன்றிணைந்த செயலணி ஒத்துழைப்பை வழங்க முன்வந்துள்ளதாக இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இணையத்தளம் ஊடாக கடந்த 8 ஆம் திகதி இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது நாட்டில் குற்றச்செயல்களைத் தடுப்பதற்கான ஒத்துழைப்பை வழங்கும் நோக்கில் குறித்த செயலணியும் அவுஸ்திரேலியாவின் பொலிஸாரும் இணைந்து இலங்கைக்கு ட்ரோன் கமராக்களை நன்கொடையாக வழங்கியிருந்தன. (நி-8)

# ஆலய வழிபாடு ஏன் - எதற்கு - எப்படி



## செய்ய வேண்டியதும் செய்யக் கூடாததும்

(தொடர்ச்சி)

மூலவருக்குத் தீபாராதனை நடக்கும் போது கண்ணை மூடி வணங்காதீர்கள். இறைவனை கண் குளிர தரிசித்து வழிபடுங்கள். காலையில் விஷ்ணுவையும் மாலையில் சிவனையும் வழிபடுவது நல்லது.

ஆலய சந்நிதிகளில் சூடம் ஏற்றுவதைத் தவிர்ப்பது நல்லது. சூடம் புகை மாசு ஏற்படுத்தும். அதற்குப் பதில் நெய் தீபம் சிறந்தது.

சந்நிதிக்குப் பின்புறம் அமர்ந்து தியானம் செய்வது மிகவும் தவறு. அதைச் செய்யாதீர்கள். அதுபோல ஆலயத்துக்குள் இருந்து கொண்டு மற்றவர்களிடம் தற்பெருமை பேசுதல் கூடாது. ஆலயத்துக்குள் வந்து விட்டால் மனம் முழுவதும் இறைவனிடமே இருக்க வேண்டும்.

ஆலயத்திற்குள் நுழைவதற்கு முன்னதாக வெளியே அமர்ந்திருக்கும் ஏழை எளிய மக்களுக்கு காசை தானமாக வழங்குங்கள். கோவிலிலிருந்து வெளியே வரும் போது தானம் செய்யாதீர்கள்.

கருவறையில் இருந்து அருள்பாலிக்கும் தெய்வத்திற்கு அபிஷேகம் செய்யப்படும் போதும் திரையிட்டு சுவாமிக்கு பிரசாதம் வழங்கும்போது தெய்வத்தை வணங்கக்கூடாது.

காலை நேரத்தில் கோவிலைச் சுற்றும்போது உடல் நலம் விருத்தியாகும். மாலை நேரத்தில் கோவிலை வலம் வருவதால் செய்த பாவங்கள் எல்லாம் தொலையும்.

இரவு நேரத்தில் சுற்றுபவர்களுக்கு மோட்சம் கிடைக்கும் என நம்பப்படுகிறது. கோவில் உண்டியலில் மறக்காமல் காணிக்கைப் பணம் செலுத்த வேண்டும்.

கோவில் விளக்குகளில் எண்ணெய் ஊற்றி எரிய வைத்தல், புதிய விளக்குகளை ஏற்றி வைத்தல், சிறியதாக எரியும் விளக்குத் திரிகளை சரி செய்து எரியத் தூண்டுவது புண்ணிய காரியமாகக் கருதப்படுகிறது.

ஆலயத்தின் பிரதான வாயில் தவிர மற்ற வாயிலில் கோவிலுக்குள்ளே செல்லக்கூடாது. கோவில் கதவுகள் மூடப்பட்டிருக்கும்போது தெய்வத்தை வணங்கக் கூடாது.

இரு சக்கர வாகனங்களில் மற்றும் காரில் பயணம் செய்யும் போது கோவிலுக்கு உள்ளே செல்லாமல் வெளியே இருந்து தெய்வத்தைக் கும்பிடுவது உகந்ததல்ல. இம்மாதிரியான செய்கை தெய்வத்தை அவமதிப்பதாகும்.

சிவன் கோவிலில் முதலில் சிவனை வழிபட்ட பிறகே சக்தியை வழிபட வேண்டும். விஷ்ணு கோவிலுக்குச் சென்றால் முதலில் மகாலட்சுமியை வழிபட்ட பிறகே விஷ்ணுவை வணங்க வேண்டும்.

விஷ்ணுவை வழிபடும் போது முதலில் பாதத்தைப் பார்த்துப் படிப்படியாக முகம் வரை பார்த்து வணங்க வேண்டும். மகாலட்சுமியை வணங்கும் போது முதலில் கண்களைப் பார்த்துப் படிப்படியாகப் பாதம் வரை பார்த்து வழிபாடு செய்தல் வேண்டும்.

ஆலயத்தில் இருந்து வீட்டுக்குப் புறப்படும்போது சற்று அமர்ந்து செல்ல வேண்டும். ஏனெனில் சிவாலயங்களில் 7 சிரஞ்சீவிகள் தங்கி இருந்து சிவதரிசனம் செய்பவர்களை அவர்கள் வீடு வரை பின்தொடர்ந்து வந்து மரியாதை செய்வதாகச் சொல்வார்கள்.

எனவே அவர்களை வணங்கி "நீங்கள் இருங்கள். நாங்கள் சென்று வருகிறோம்" என்று விடைபெற வேண்டும். இவ்வாறு முறைப்படி ஆலய தரிசனம் செய்தல் முழுப் பலனையும் பெற முடியும். (முற்றும்)

# செய்தித்துளிகள்

## இந்தியக் கடற்படைக் கப்பல் இலங்கைக்கு நல்லெண்ண விஜயம்

(கொழும்பு)

இலங்கை - இந்தியா நாடுகளுக்கு இடையிலான நெருக்கமான கடல் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரித்துக் கொள்வதற்கான முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான ஐ.என்.எஸ்.ரான்விஜய் நீரமூழ்கிக் கப்பல், இலங்கைக்கு 3 நாட்கள் நல்லெண்ண பயணமாக நேற்று முன்தினம் வந்தடைந்துள்ளது. (நி-8)

## நீண்டகால பகை கொலையில் முடிந்தது

(கொழும்பு)

பொல்பிதிகம - தலாதபிட்டி பகுதியில் இரு நபர்களிடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் புத்தாண்டு தினமான நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

குறித்த இருவருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதில் ஒருவர் மற்றைய நபரை கல்லால் அடித்துக் கொலை செய்துள்ளார்.

இருவருக்கும் இடையே இருந்த நீண்டகால பகைமை மற்றும் மனகசப்பு இந்தச் சம்பவத்திற்கு காரணம் எனப் பொலி ஸார் குறிப்பிட்டனர். (நி-8)

## புத்தாண்டு தினங்களில் 309 பேர் தேசிய வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

தமிழ்-சிங்கள புத்தாண்டு தினங்களான கடந்த 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் ஏற்பட்ட திடீர் விபத்துக்கள் காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 309 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் ரத்னசேகர தெரிவித்தார்.

அத்துடன் இவ்வாறு ஏற்பட்டுள்ள திடீர் விபத்தானது கடந்த வருட புத்தாண்டு தினங்களுடன் ஒப்பிட்டு பார்க்கையில் 39 சதவீத அதிகரிப்பாகும். கடந்த வருடம் குறித்த இரண்டு தினங்களிலும் திடீர் விபத்துக்கள் என 188 சம்பவங்களே அறிக்கையிடப்பட்டிருந்ததாகவும் அவர் கூறினார். (நி-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 240 |
| தக்காளி | 120 | 140 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 70 | 50 |
| கோவா | 120 | 120 | 160 |
| கரட் | 180 | 160 | 300 |
| பூசணி | 70 | 70 | 60 |
| புடோல் | 120 | 100 | 100 |
| வாழைக்காய் | 50 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 250 | 280 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 100 |
| பாகற்காய் | 260 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 150 | 140 | 150 |
| பயற்றங்காய் | 180 | 120 | 100 |
| லீக்ஸ் | 120 | 120 | 200 |
| பீற்றூட் | 100 | 100 | 160 |
| கறிமிளகாய் | 170 | 160 | 160 |
| முருங்கைக்காய் | 800 | 400 | 600 |
| போஞ்சி | 180 | 160 | 240 |
| கத்தரிதம்புள்ள | 100 | 180 | 200 |
| கீரை - 1 பிடி | 40 | 40 | 40 |
| தேசிக்காய் | 100 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 60 | 50-80 |
| இராசவள்ளி | 250 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 250 | -- | 240 |
| முள்ளங்கி | 40 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 40 |
| வல்லாரை | 40 | 20 | 30 |
| ஈரப்பலா | -- | 100 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமார் 10 வருடங்களாக இயங்காத அரிசி ஆலை இனியாவது இயங்குமா?

(கண்டாவளை)

**முல்லைத்தீவு துணுக்காய் பகுதியில் சுமார் 4.2 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட நவீன அரிசி ஆலை ஒன்று கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக இயங்காத நிலையில் காணப்படுகிறது.**



முல்லைத்தீவு மாவட்டத்தின் விவசாய பிரதேசங்களில் ஒன்றாக காணப்படுகின்ற துணுக்காய் பிரதேசத்தில் அறுவடை செய்கின்ற நெல்லைக் கொள்வனவு செய்து அவற்றை அரிசியாக்கி ஏற்றுமதி செய்யும் வகையில் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் கடந்த 2011 ஆம் ஆண்டு சுமார் 4. 2 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட நவீன வசதிகள் கொண்ட அரிசி ஆலை துணுக்காய் பகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

இந்நிலையில் இதனை பொறுப்பேற்றுக்கொண்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக மேற்படி அரிசியாலையை இயங்க வைப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை.

இதனால் குறித்த அரிசியாலை மூடிய நிலையிலேயே காணப்படுகின்றது.

குறித்த பிரதேசத்தில் அறுவடை செய்கின்ற நெல்லை விவசாயிகள் குறைந்த விலைகளில் தனியாருக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலை காணப்படுகிறது.

குறிப்பாக இந்த பிரதேசத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நெல்லை கொள்வனவு செய்வதற்குரிய நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை மீள்குடியேற்றத்தின் பின்னரான உட்கட்டுமான வசதிகள் அபிவிருத்திகள் என்ற அடிப்படையில் சுமார் 4.2 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட இந்த அரிசியாலையை இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-6-315)

## புதுவருடத்தில் எழுவர் கைது

(தருமபுரம்)

புத்தாண்டு தினத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய ஏழு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தருமபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாறு பகுதியில் முச்சக்கரவண்டியில் வாள் மற்றும் தடி பொல்லு என்பவற்றுடன் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய 7 நபர்களை தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த தருமபுரம் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (5-6-316)


கொரோனா காரணமாகத் தொடர்ந்து மூன்றாவது வாரமாக முடக்கப்பட்டிருக்கும் திருநெல்வேலி பாரதிபுரம் கிராமத்துக்குத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால் உலர் உணவுப் பொதிகள் கடந்த செவ்வாய்க் கிழமை வழங்கி வைக்கப்பட்டுள்ளன.



## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2285


**கணேஷ்**

புரிதல் இல்லாத வாழ்க்கை துடுப்பு இல்லாத படகைப் போன்றது...! சிறிது தூரம் மிதக்கலாம்...! தொலைதூரம் கடக்க முடியாது...!




**பிருந்தா**

கோபத்தின் போது வார்த்தைகளில் நிதானம் தேவை. கோபம் தீர்ந்துவிடும் வார்த்தைகள் வாழ்ந்து கொண்டேயிருக்கும் பிறர் மனதில் ஆறாத வலிகளாய்



**கண்ணன்**

உழைப்பு உடலைப் பலப்படுத்தும் கஷ்டங்கள் மனதைப் பலப்படுத்தும்



**விஜி**

பூக்களாக இருக்காதே வீழ்ந்து விடுவாய், செடிகளாக இரு அப்போதுதான் பூத்துக் கொண்டே இருப்பாய்



**சந்திரலேகா**

உதவியவர்கள் நன்றிக்குரியவர்கள் என்றும் நினைவில் வை...! உதவாதவர்கள் உன் வெற்றிக்குரியவர்கள் என்றும் மறந்து விடாதே!



**கிருஷ்ணவேணி**

வார்த்தையால் பேசுவதை விட வாழ்ந்து காட்டுவதே சிறப்பு



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றும் பேசாதிருப்பது நல்லது. எப்போது? பேசியும் நடக்க முடியாதபோது.

*– கி.ஆ.பெ.விசுவநாதம்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நாவடக்கம் இல்லாத நாவால் வரும் அழிவு!

உலகப் பொதுமறையாம் திருக்குறள் தந்த திருவள்ளுவப் பெருமானாரால், தமிழ் வான் புகழ் கொள்ளலாயிற்று.

திருக்குறளை அதன்மூல மொழியாகிய தமிழில் படிப்பதற்காக அடுத்த பிறப்பில் நான் தமிழனாகப் பிறக்க வேண்டும் என்றார் மகாத்மா காந்தி. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் வெளிநாட்டுப் பயணங்களின்போது திருக்குறளை தன் சொல் லுக்கு உறுதியாக்குகிறார்.

இத்தகு பெருமைக்குரிய திருக்குறளை சிங்கள மக்கள் கட்டாயம் படிக்க வேண்டும்.

அவ்வாறு சிங்கள மக்கள் திருக்குறளைப் படிப்பதற்கு வசதியாக, சிங்களப் பாடப் புத்தகங்களில் திருக்குறளைச் சேர்த்துக் கொள்வது நன்மை தரும்.

இவை ஒருபுறமிருக்க, 1330 குறள்களில் ஒன்று

*யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்*
*சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு*

என்பதாகும்.

இக்குறளின் பொருள், இந்த உலகில் எந்த அறத்தைக் காப்பாற்றத் தவறினாலும் நாவைக் காத்துக் கொள்ள வேண்டும்.

ஆம், ஒரு சொல்லை சொல்லிவிட்டால், அதனை மீளப்பெறுவதென்பது முடியாத காரியம்.

எனவே எதையும் நிதானமாகச் சிந்தித் துப் பேசுவதுதான் அறத்தைக் காப்பாற்றுவதற்கான வழி.

இருந்தும் சிலர் என்ன பேசுகிறோம். என்ன கதைக்கின்றோம் என்று சிந்திக்காமல், தாம் நினைத்தபாட்டில் கதைத்துவிட, அதுவே மிகப்பெரும் தலையிடியாய் மாறி விடுகிறது.

உதாரணத்துக்கு அண்மையில் நடந்த தமிழக சட்டசபைத் தேர்தல் பிரசாரத்தின் போது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கியஸ்தர் ஆ.ராசா; தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியின் தாயாரை தரக் குறைவாகப் பேசிவிட, அஃது பெண்களை இழிவுபடுத்தியதாகக் கருதப்பட, பெண்கள் அமைப்புகள் உட்பட அனைத்துத் தரப்புகளும் ஆ.ராசாவை வறுத்தெடுத்தன.

தேர்தலில் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக சிலவேளை தோல்வியைச் சந்தித்தால், அதற்குக் காரணம் ஆ.ராசாவின் நாவடக்கம் இன்மையே என்று கூற முடியும்.

அந்தளவுக்கு ஆ.ராசாவின் பேச்சு தமிழக மக்களிடையே வெறுப்பையும் முகச்சுழிப்பையும் ஏற்படுத்திவிட்டது.

இதுபோலத்தான் எங்கள் நாட்டில் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம அவர்கள் உரையாற்றும்போது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஹிட்லர் போல மாறி ஆட்சி செய்வார் எனக் கூறியிருந்தார்.

அவரின் உரை ஒரு கணப்பொழுதில், உலக நாடுகளில் இலங்கையின் நற்பெயருக்குப் பெரும் களங்கத்தை ஏற்படுத்திவிட்டது.

இது தொடர்பில் தனது கருத்தைப் பதிவேற்றம் செய்த இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் "ஹிட்லர்எந்த அரசியல்வாதிகளுக்கும் முன்மாதிரியாக இருக்க முடியாது" எனக் கூறியுள்ளார்.

ஆக, இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தனது நாவைக் காப்பாற்றாமல் விட்டதனால், ஜனாதிபதி கோட்டாவினது கோபத்துக்கும் ஆளாகியிருப்பார் என்று ஊகிப்பதில் தவறில்லை.

ஆக, எந்த அறத்தைக் காப்பாற்றத் தவறினாலும் "நா"வை காப்பாற்றிக் கொள்ளுங்கள். அது உங்களை சிக்கலுக்குள் அகப்படாமல் பாதுகாத்துக் கொள்ளும்.

### துறைமுக நகர சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்தி

# 15 க்கும் மேற்பட்ட மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல்

(கொழும்பு)

அரசாங்கம் பாராளுமன்றில் சமர்ப்பித்துள்ள, கொழும்பு துறைமுக நகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டமூலத்தை ஆட்சேபித்து உயர் நீதிமன்றில் பல்வேறு தரப்பினரும் விஷேட மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

நேற்று மாலையாகும் போது, நேரடியாகவும் இணைய வழி ஊடாகவும் சுமார் 15 க்கும் மேற்பட்ட மனுக்கள் இவ்வாறு தாக்கல் செய்யப்பட்டிருந்ததாக உயர் நீதிமன்ற தகவல்கள் தெரிவித்தன.

அதன்படி இவ்வாறு தாக்கல் செய்யப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்தி தாக்கல் செய்யப்பட்டுள்ள அனைத்து மனுக்களையும் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை பரிசீலனைக்கு எடுக்க உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

அதற்காக பிரதம நீதியரசரின் கீழ் ஐவர் கொண்ட நீதியரசர்கள் குழாமும் அமைக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான புவனேக அலுவிஹார, பிரியந்த ஜயவர்தன, முர்து பெர்னாண்டோ மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோரே குறித்த நீதியரசர்கள் குழாமில் அங்கம் வகிக்கும் நீதியரசர்களாவர். (ம-3)

## மின்னல் தாக்கியதில் விவசாயி மரணம்

### மட்டக்களப்பில் சோகம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் படுவான்கரைப் பிரதேசத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மலையர்கட்டு கிராமத்தில் நேற்று மாலை மின்னல் தாக்கியதில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தற்போது அப்பகுதியில் சிறுபோக வேளாண்மைச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் விவசாயிகள் மும்முரமாக வயலில் வேலை செய்து வருகின்றனர்.

இந் நிலையில், மாலை வேளையில் திடீரென அப்பகுதியில் பலத்த இடி மின்னல் மற்றும் காற்றுடன் மழை பெய்துள்ளது.

இதன் போது மலையர்கட்டு கிராமத்தில் வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது மின்னல் தாக்கி வயலில் வேலை செய்து கொண்டிருந்த 32 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான நல்லதம்பி மோகனசுந்தரம் எனும் விவசாயி உயிரிழந்துள்ளதாக அப்பகுதி கிராம சேவகர் தெரிவித்தார். (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக் காக நாளை 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** மணியந்தோட்டம் ஐஸ்தொழிற்சாலை, ஏ.வி.வீதி கொழும்புத்துறை, கொழும்புத்துறை நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை வீதி, சுவாமியார் சந்தி, கொழும்புத்துறை வீதி, மணியந்தோட்டம், பழைய பூங்கா வீதி, கொழும்புத்துறை வீதி சந்தி, பாசையூர், பாசையூர் ஈச்சமோட்டை வீதி, பெரியகோவில், புங்கன்குளம் கொழும்புத்துறை வீதி சந்தி, உதயபுரம், ஆழியவளை, கட்டைக்காடு, கட்டைக்காடு இராணுவ முகாம் (55ஆம் பிரிவு), கேவில் முள்ளியான், வெற்றிலைக்கேணி, வெற்றிலைக்கேணி முள்ளியான், இராணுவ முகாம் [illegible] இளவாலை, இளவாலை, மாரீசன் கூடல், மெய்கண்டான், பெரியவிளான், பெரியவிளான் சந்தி, சேந்தான்குளம், சென் ஜூட் இளவாலை ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** 68 ஆவது பிரிவு டயலொக் கோபுரம், இரணைப்பாலை, தேவிபுரம், 18 ஆவது வி.ஐ.ஆர். இராணுவ முகாம், தேவிபுரம், 68 ஆம் பிரிவு இராணுவ முகாம்இரணைப்பாலை ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** முதலாவது குறுக்குத்தெரு, ஒஸ்ரியா ஸ்ரூடியோ, முதனாவது குறுக்குத் தெரு, பஜார்வீதி, ஹொரவப்பொத்தானை வீதி, இலுப்பையடிச் சந்தி, கந்தசாமி கோவில் வீதி, குகன் மோட்டார்கள், 2 ஆவது குறுக்குத் தெரு, மில் வீதிச்சந்தி, இறம்பைக்குளம், சூசைப்பிள்ளையார் குளம், ஹோட்டல்- ஒவியா, லங்கா அரிசி ஆலை, இராணி அரிசி ஆலை, எஸ்.வி.ஆர். அரிசி ஆலை ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

**சைவப் பெருமக்களுக்குத் திருநீறு, உருத்திராட்சம், ஐந்தெழுத்து என்று மூன் றும் இன்றியமையாதவை. இந்த மூன்றில் முந்தி நிற்பது திருநீறு எனவுணர்க.**

**தீவினை விட்டுஈட்டல்பொருள்என்று ஒளவையார் கூறியிருக்கிறார். கற்பை இழந்து பொருள்தேடுவதும்களவு செய்து பொருள்தேடுவதும் கள்ளை விற்றுப் பொருள் சம்பாதிப்பதும் ஒன்றுதான். (தொடரும்)**

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### துன்பங்களைப் போக்கும் வெற்றிலை; 12 இராசியினரும் செய்ய வேண்டியது

விசேட வீடுகளிலும், சாப்பாடு சாப்பிட்ட பிறகு சாப்பிடும் பொருள் மற்றும் மருத்துவ குணம் நிறைந்த பொருளாக வெற்றிலை விளங்குகின்றது.

வெற்றிலை காம்பில் பார்வதிதேவியும், வெற்றிலையின் நுனியில் லட்சுமியும், நடுவில் சரஸ்வதியும் வாசம் செய்வதாய் ஐதீகம் ஆகும்.

அனைத்து சுபகாரியங்களிலும் முக்கிய பங்கு வகிக்கும் வெற்றிலையை எந்த ராசிக்காரர்கள் என்ன செய்தால் கஷ்டங்கள் தீரும் என்று காணலாம்.

**மேஷம்**

வெற்றிலையில் மாம்பழம் வைத்து செவ்வாய் கிழமை முருகனை வழிபட்டு சாப்பிட துன்பங்கள் அகலும்.

**ரிஷபம்**

வெற்றிலையில் மிளகு வைத்து செவ்வாய் கிழமை ராகுவை வழிப்பட்டு சாப்பிட்டால் துன்பம் விலகும்.

**மிதுனம்**

வெற்றிலையில் வாழைப்பழம் வைத்து புதன்கிழமை இஷ்ட தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் துன்பம் விலகும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டுப் பலன்கள்



## 14.04.2021 முதல் 13.04.2022 வரை

### மகர இராசி வாசகர்களே!

பிறக்கும் புத்தாண்டில் உங்கள் இராசிநாதன் சனி, உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கின்றார். ஏழரைச் சனியில் ஜென்மச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகின்றது. எனவே ஆரோக்கியத் தொல்லைகளால் உற்சாகம் குறையும். மனக்கலக்கங்களும் அதிகரிக்கும். அமைதியான வாழ்க்கைக்கு ஆலய வழிபாடு தேவை. விரயங்களைத் தவிர்க்க எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது. சனி- செவ்வாய் பார்வை காலத்தில் மிகமிக கவனம் தேவை.

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி பகவான், ஜென்மச் சனியாக சஞ்சரிக்கின்றார். அவரோடு இணைந்திருந்த குரு பகவான் ஆண்டு தொடங்குவதற்கு முன்னதாகவே கும்ப இராசிக்குச் சென்று விட்டார். எனவே சனியின் பலம் கொஞ்சம் கூடுகின்றது. அதேநேரத்தில் உங்கள் இராசியை கேது பகவான் 3 ஆம் பார்வையாக பார்க்கின்றார். எனவே ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வெளிநாட்டில் இருந்து அனுகூலமான தகவல் வருவதில் தாமதம் ஏற்படலாம். குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு ஆரோக்கியத் தொல்லை ஏற்பட்டு உள்ளத்தில் வாட்டம் ஏற்படும்.

பஞ்சம ஸ்தானத்தில் ராகு இருப்பதால், பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. அவர்கள் தாங்களாகவே எடுக்கும் முடிவு உங்களுக்கு மனசங்கடத்தை ஏற்படுத்தும். உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எவ்வளவு உதவி செய்தாலும் அவர்கள் நன்றி காட்டமாட்டார்கள். பிள்ளைகளின் எதிர்கால முன்னேற்றம் கருதி நீங்கள் எடுக்கும் முடிவுகளில் மாற்றம் ஏற்படும். சொத்துக்களை வாங்கும் பொழுது பத்திரப் பதிவில் கவனம் தேவை. உடன்பிறப்புகள் பாசம் காட்டும் நிலை, முன்பு இருந்த அளவிற்கு இப்பொழுது இருக்காது. பூர்வீக சொத்துக்களை பிரித்துக் கொள்வதில் ஆளுக்கொரு பக்கமாகச் செல்வர்.

உங்கள் இராசிக்கு 2 ஆம் இடத்தில் குருபகவான் சஞ்சரிக்கின்றார். விரயாதிபதியான குரு, தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது பணம் வந்த மறுநிமிடமே செலவாகிவிடும். வியாபாரத்தில் சரிவு ஏற்பட்டு அதை ஈடுசெய்ய புதிய முயற்சி எடுப்பீர்கள். பொதுவாக வீண் விரயங்கள் ஏற்படாமல் இருக்க சுபவிரயங்களை மேற்கொள்வது நல்லது. வீட்டு முன்னேற்றம் கருதி எந்தெந்த வழிகளில் எல்லாம் விரயம் செய்யலாம் என்பதை முன்னதாகவே தீர்மானித்துக் கொள்ளுங்கள். அதன் பிறகு அதை நடைமுறைப்படுத்துங்கள்.

கட்டிய வீட்டை பழுது பார்ப்பது அல்லது புதியதாக வீடு கட்டுவது, வாகனங்கள் வாங்குவது, பிள்ளைகள் சிறுவர்களாக இருந்தால் அவர்கள் எதிர்கால நலன் கருதி வங்கிகளில் வைப்பு நிதி வைப்பது, சீர்வரிசைப் பொருட்கள் வாங்குவது போன்றவற்றில் கவனம் செலுத்தலாம். சுக ஸ்தானத்தில் நான்கு கிரகங்களின் சேர்க்கையும் புத -ஆதித்ய யோகம், புத -சுக்கிர யோகம், செவ்வாய், சுக்கிரன் பரிவர்த்தனை யோகம் இருப்பதால் உத்தியோகத்தில் வரும் பிரச்சினைகளைச் சமாளிக்கும் ஆற்றல் உண்டு. பொருளாதார நிலை உயர புதிய வழிபிறக்கும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமைய சுயஜாதக ரீதியாக திசாபுத்திக்கேற்ற தெய்வங்களை வழிபடுவது நல்லது.

### குருவின் வக்கிர இயக்கம்

ஆண்டின் தொடக்கம் முதல் 13.9.2021 வரை, கும்ப இராசியில் அதிசார கதியில் குருபகவான் சஞ்சரிக்கின்றார். அதோடு 16.6.2021 முதல் வக்கிர இயக்கத்திலும் இருக்கின்றார். 14.9.2021 முதல் 12.10.2021 வரை, மகர இராசியில் குருபகவான் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். இதன் விளைவாக உங்களுக்கு நற்பலன்களே நடைபெறும். பொதுவாக 3, 12 இற்கு அதிபதி வக்கிரம் பெறும்பொழுது, உடன்பிறப்புகளின் உதவி கிடைக்கும். கடன் சுமை கொஞ்சம் குறையும். இடமாற்றங்கள் இனிமை தரும் விதத்தில் அமையும். தடம் மாறிச் சென்ற நண்பர்கள் தானாக வந்து சேருவர். வழக்குகள் சாதகமாக அமையலாம்.

### குருப்பெயர்ச்சி காலம்

ஆண்டின் தொடக்கத்தில் கும்ப இராசியில் அதிசார கதியில் சஞ்சரிக்கும் குருபகவான், மீண்டும் வக்கிர கதியில் மகர இராசிக்கு வந்து, 13.11.2021 அன்று முறையாக கும்ப இராசிக்கு பெயர்ச்சியாகிறார். 13.4.2022 இல் மீண்டும் மீன இராசிக்குப் பெயர்ச்சியாகிச் செல்கின்றார். கும்பத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, அதன் பார்வை 6, 8, 10 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. அந்த இடங்கள் புனிதமடைவதால் அதற்குரிய ஆதிபத்யங்கள் வாயிலாக நற்பலன் கிடைக்கும். 6 ஆம் இடத்தைப் பார்ப்பதால் நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள். ஆரோக்கியத்தில் சிறு தொல்லை வந்தாலும் உடனடியாக மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. உத்தியோகத்தில் பணிநிரந்தரம் ஆகாதவர்களுக்கு இப்பொழுது பணி நிரந்தரம் ஆகலாம்.

குருவின் பார்வை 8 ஆம் இடத்தில் பதிவதால் ஆயுள் ஸ்தானம் பலப்படுகின்றது. ஆரோக்கியத் தொல்லை அகலும். இழந்த பதவிகளை மீண்டும் பெறுவீர்கள். தொழிலில் ஏற்பட்ட குறுக்கீடு அகலும். குடும்பத்தில் கல்யாணம் போன்ற சுப காரியங்கள் சிறப்பாக நடைபெறும். வியாபாரத்தில் இதுவரை ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்வீர்கள். உத்தியோகத்தில் ஒரு சிலருக்கு நீண்ட தூரத்திற்கு மாறுதல் கிடைக்கலாம்.

மீனத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்திற்கு வருகின்றார். 3 இற்கு அதிபதி 3 ஆம் இடத்திற்கு வரும்பொழுது முன்னேற்றங்கள் கூடுதலாக இருக்கும். உடன்பிறப்புகள் உங்களுக்கு உறுதுணையாக இருந்து நல்ல காரியங்களை முடித்துக் கொடுப்பர்.

### ராகு-கேது பெயர்ச்சி காலம்

21.3.2022 அன்று மேடத்தில் ராகுவும் துலாத்தில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். உங்கள் இராசியைப் பொறுத்தவரை நான்காமிடத்திற்கு ராகுவும் பத்தாமிடத்திற்கு கேதுவும் வருகிறார்கள். இக்காலத்தில் அர்த்தாஷ்டம ராகுவாக இருப்பதால் ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கும். கொஞ்சம் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. தாயின் உடல்நலத்தில் குறைபாடுகள் ஏற்பட்டு அகலும்.

வாகனங்களால் கவலை உண்டு. 'சொந்த வீடு வாங்கவில்லையே' என்று ஏங்கியவர்களுக்கு, இப்பொழுது இடம் வாங்கும் யோகம் அல்லது வீடு வாங்கும் யோகம் வந்து சேரும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியலாம். புதிய நண்பர்களை சேர்த்துக் கொள்ளும் பொழுது, ஒருகணம் சிந்திப்பது நல்லது.




10 ஆம் இடத்தில் கேது சஞ்சரிப்பதால் எதிர்பார்த்த பதவிகள் இல்லம் தேடி வரலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகள் மூலம் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். அரசு வேலைக்கு முயற்சி செய்தவர்களுக்கு அது கைகூடும். சம்பள உயர்வு பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தவர்களுக்கு அது தானாகவே கிடைக்கும். ஓய்வு பெற்ற பிறகும் கூட ஒரு சிலருக்கு தொடர்ந்து வேலை நீடிக்கலாம்.

### சனியின் வக்கிர காலம்

12.5.2021 முதல் 26.9.2021 வரை, மகர இராசியில் சனி பகவான் வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு அதிபதியாகவும் தனாதிபதியாகவும் விளங்கும் சனி வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல.

உடல் ஆரோக்கிய சீர்கேடுகள் உருவாகலாம். ஒவ்வாமை நோய்க்கு ஆட்பட நேரிடும். விரயங்கள் கூடுதலாக இருக்கும். வேலை மாற்றம் பற்றி சிந்திப்பீர்கள். வருமானத் தடைகள் அதிகரிக்கும். குடும்ப ஒற்றுமை குறையும். நாவில் கவனம் செலுத்தினால். நன்மைகள் அதிகம் சந்திக்கலாம்.

### கவனமுடன் செயற்பட வேண்டிய காலம்

14.4.2021 முதல் 3.6.2021 வரை, 4.6.2021 முதல் 21.7.2021 வரை மற்றும் 24.10.2021 முதல் 7.12.2021 வரை, செவ்வாய்-சனி பார்வை உள்ளது. இக்காலத்தில் துணிவும் தன்னம்பிக்கையும் குறையும். தொல்லை தரும் தகவல்கள் நிறைய வந்து கொண்டேயிருக்கும்.

சந்தர்ப்பங்களை சாதகமாக்கிக் கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும். தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை. வேலை தேடி வெளியூர் சென்றவர்களுக்கு அது கிடைக்காமல் வாங்கிய சொத்தை விற்க நேரிடும். வளர்ச்சியில் தளர்ச்சி ஏற்படாமல் இருக்க வழிபாட்டை முறையாக மேற்கொள்ளுங்கள்.

### பெண்களுக்கான பலன்கள்

இந்தப் புத்தாண்டில் குடும்பச் சுமை அதிகரிக்கும். கொள்கைப் பிடிப்போடு செயற்பட இயலாது. உடல்நல பாதிப்புகள் ஏற்படலாம். கணவன் - மனைவிக்குள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவதன் மூலமே ஒற்றுமையைப் பலப்படுத்திக் கொள்ளலாம்.

ஜென்மச் சனியின் ஆதிக்கம் நடப்பதால் பக்கத்தில் உள்ளவர்களின் பகையை வளர்த்துக் கொள்ளாதீர்கள். பிள்ளைகளின் முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். தாய் மற்றும் உடன்பிறப்புகள் உங்களுக்கு அனுகூலமாக நடந்து கொள்வர். ப்ணிபுரியும் பெண்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்கும்.

### வளர்ச்சி தரும் வழிபாடு

சனிக்கிழமை தோறும் விரதமிருந்து அனுமனுக்கு அதிர்ஷ்ட எண் ஆதிக்கத்தில் வெற்றிலை மாலை அணிவித்து வருவதோடு, யோகபலம் பெற்ற நாளில் ஆஞ்சநேயரை வழிபட்டு வருவது நல்லது. நம்பிக்கைகள் அனைத்தும் நடந்தேறும்.

(தொடரும்)

## ஆலய வழிபாடு அமைதியை வழங்கும்

## ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவில் பாதுகாப்பு...

தேரோவில் பகுதியினை சேர்ந்த 52 வயதுடைய ரங்கசாமி ரவிசங்கர் என்ற 4 பிள்ளைகளின் தந்தையே அவரது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் மரண விசாரணை அதிகாரியின் விசாரணையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. (ம-3)

## மேலும் நால்வர்...

தார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இவ்விடயம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் இதுவரை கொரோனா தொற்று காரணமாக இலங்கையில் உயிரிழந்தவர்களது எண்ணிக்கை 604இல் இருந்து 608 ஆக அதிகரித்துள்ளது.(ம-3)

## ஒரே குடும்பத்தில்...

ளது.

வவுனியா, தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த குடும்பம் ஒன்று வெளிநாடு செல்வதற்காக சுகாதார பரிசோதகர்களின் மூலம் பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

குறித்த பிசிஆர் பரிசோதனை முடிவுகள் வெளியாகிய நிலையில் குறித்த குடும்பத்தைச் சேர்ந்த 3 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த நபர்களை கொரோனா தடுப்பு வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களை சுயதனிமைப்படுத்து வதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (ம-3,250)

## திருநெல்வேலி...

உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் 186 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 10 பேருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

திருநெல்வேலி சந்தை வர்த்தகர்கள், பணியாளர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் என 8 பேருக்கு கொரோனா தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அவர்களிடம் நேற்று முன்னெடுக்கப்பட்ட இரண்டாவது பரிசோதனையிலேயே தொற்று உள்ளமை அறியப்பட்டது.

கிளிநொச்சி வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு கொரோனா தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு கொரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் மேலும் தெரிவித்தார். (ம-3,18,33)

## கொரோனாவுடன்...

குணவர்தன உறுதிப்படுத்தியுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

கரவெட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 83 வயதான ஆண் ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கொரோனா தொற்றாளராக அடையாளம் காணப்பட்டிருந்தார்.

இதையடுத்து அவர் ஹோமாகம ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, அங்கு மரணமடைந்துள்ளார்.

இவரது மரணத்திற்கான காரணம், கொரோனா தொற்றுடன் உக்கிர குருதி விஷமடைவு என அறிவிக்கப்பட்டுள்ளது.(ம-3)

## சாவகச்சேரி...

கோவிட்-19 நோயால் உயிரிழந்துள்ளார் என வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

முல்லேரியா தொற்றுநோயியல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று அவர் உயிரிழந்ததாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

பெண்ணின் சடலம் சுகாதார நடைமுறைகளின் கீழ் முல்லேரியாவிலேயே மின்தகனம் செய்யப்படவுள்ளது. (ம-3,33)

## இனவாதத்தை...

முல்லேரியா பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் சாசனத்தில் பேச்சு சுதந்திரம் காணப்பட்டது என்ற போதிலும் அதற்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில் தற்போதைய சட்டத்தில் திருத்தங்களை செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகங்களில் இனங்களுக்கு இடையில் முரண்பாட்டை ஏற்படுத்தக் கூடிய வகையில் பொய்யான செய்திகள் வெளியிடப்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

இனவாதத்தை தூண்டும் இனத்துரோக செயற்பாடுகளில் ஈடுபடுவோரை தண்டிக்கும் வகையில் சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட உள்ளது என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## சிவில் உடையில்...

கள் கடுமையாக அமுல்படுத்தப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

புதுவருடம் நிறைவடைந்ததும் சுகாதார வழிமுறைகளை பின்பற்றத் தேவையில்லை என மக்கள் கருதக்கூடாது.

பொதுமக்கள் சரியான சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றுகிறார்களா என்பதைக் கண்காணிக்க சிவில் உடையில் பொலிஸார் நாடெங்கும் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் முகக் கவசம் அணிதல் உட்பட தனிமைப்படுத்தல் விதிமுறைகளைப் பின்பற்றாதவர்களுக்கு எதிராக சட்டம் அமுல்படுத்தப்படும் என அஜித் ரோஹண தெரிவித்தார். (ம-3)

## பண்டிகைக்...

நோயியல் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் வாரங்களில் நாட்டில் கோவிட் தொற்றாளர் எண்ணிக்கை உயர்வடையும் என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு பிரதம மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

தமிழ் சிங்கள புத்தாண்டு காலம் நிறைவின் பின்னர் நோய்த் தொற்றாளர் எண்ணிக்கை மேலும் உயர்வடையும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

பண்டிகைக் காலத்தில் அதிக எண்ணிக்கையிலான மக்கள் நடமாட்டம்

### அமெரிக்க டொலருக்கு எதிராக

# இலங்கை ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி

(கொழும்பு)

டொலருக்கு எதிரான இலங்கை ரூபாய் மேலும் வீழ்ச்சியடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி நேற்று டொலர் ஒன்றுக்கான இலங்கை ரூபாயின் விற்பனை விலை 204 ரூபாய் 62 சதமாக அமைந்திருந்தது.

கடந்த ஒரு வார காலமாக டொலருக்கு எதிரான ரூபாயின் பெறுமதி தொடர்ந்தும் சரிவடைந்து வருகிறது.

இதனையடுத்து ரூபாயின் பெறுமதியை ஸ்திரப்படுத்த வைக்கும் முகமாக இலங்கை மத்திய வங்கி பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

எனினும் நேற்றும் டொலருக்கு எதிரான ரூபாய் பெறுமதியில் தேய்மானம் ஏற்பட்டுள்ளது. (ம-3)

### பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தினாலும்

# மே தினக் கூட்டம் தனியாக நடத்தப்படும்

## சுதந்திரக் கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தினாலும் மே தினத்தை தனியாக நடத்த எடுத்த தீர்மானத்தில் எந்த மாற்றமும் இல்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனினும் மாகாண சபைத் தேர்தலில் தனித்து போட்டியிடுவதா? இல்லையா? என்பது குறித்து இணக்கப்பாட்டுக்கு வர இன்னும் காலம் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதன் காரணமாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தனியான கட்சி என்ற வகையில், பொலநறுவையில் மே தினக் கூட்டத்தை நடத்த ஏற்பாடுகளை செய்து வருவதாகவும் அந்த பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

*(முன்னர் வந்த செய்தி உள்ளே)*

காணப்பட்டதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே எதிர்வரும் வாரங்களில் கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை உயர்வடையும் அபாயம் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார். (ம-3)

## கொழும்பு...

ளது என்று இலங்கை பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவை நிறுவுவதற்கான சட்ட வரைபு குறித்து நாரஹேன்பிட்டி அபயராமயா விகாரையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய விஜயதாஸ ராஜபக்ஷ,

சட்டவரைபு நிறைவேற்றப்பட்டால், கொழும்பு துறைமுக நகரம் நாட்டின் நிர்வாக ஆட்சியில் இருந்து விடுபடும். சட்ட வரைபின்படி, துறைமுக நகரம் இலங்கைக்கு சொந்தமானதல்ல. கொழும்பு நகராட்சி மன்றத்தின் கீழ் வராது.

1,100 ஏக்கர் நிலப்பரப்பு மேற்கு மாகாணத்தின் கீழ் வராது, கொழும்பு மாவட்டத்திற்குள்ளும் வராது. அது ஒரு ஆணைக் குழுவால் கட்டுப்படுத்தப்படும். சீன முதலீட்டாளரின் விருப்பத்திற்கு ஏற்ப செயற்படும். சட்டமூலம் நிறைவேற்றப்படும்போது, துறைமுக நகரத்தின் முழுமையான கட்டுப்பாட்டையும் நகர அபிவிருத்தி அதிகார சபை இழக்கும். இந்த பகுதி நாட்டின் சட்டத்தின் கீழ் வராது. வரி தொடர்பான 14 சட்டங்களில் இருந்து விடுபட்டுள்ளது என்றார்.

துறைமுக நகர நிலப்பரப்பு ஒரு சீன காலனியாக இருக்கும் என்றும் துறைமுக நகருக்குள் உள்ள நிலங்களை பல்வேறு நாடுகளுக்கு விற்கலாம் அல்லது சொந்தமாக்கலாம் என்றும் குறிப்பிட்டார்.

நிலம், நிர்வாக அமைப்பு மற்றும் வெளிநாட்டு பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் அதிகாரங்களை ஆணைக்குழு கொண்டிருப்பதால் துறைமுக நகரத்தை ஒரு தனிநாடாக கருதலாம் என்று தெரிவித்தார். (ம-3)

### நாட்டில் நேற்றும்

# 167 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

இலங்கையில் மேலும் 167 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் ஏற்கனவே கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். (ம-3)

## மூன்று விவசாயி...

நேற்று 18 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடப்பட்டதோடு மழை மற்றும் மின்னல் தாக்கம் ஏற்படும் என எச்சரிக்கை விடப்பட்டுள்ள நிலையில் குறித்த சம்பவம் பதிவாகியுள்ளது.

முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு வயல் வெளியில் விவசாய நடவடிக்கைகளில் விவசாயிகள் ஈடுபட்டிருந்த நிலையில் நேற்று மாலை கனமழையும் மின்னல் தாக்கமும் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த பகுதிகளில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த மூன்று விவசாயிகளே மின்னல் தாக்கம் காரணமாக உயிரிழந்துள்ளனர்.

சம்பவத்தில் குமுழமுனை மேற்கு பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய கணபதிப்பிள்ளை மயூரன், குமுழமுனை மத்தி பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய சுவர்னன், வற்றாப்பளை பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய சுஜீவன் ஆகிய குடும்பஸ்தர்களே உயிரிழந்தவர்களாவர். (ம-3,33,281)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# யாழ்ப்பாணம் உள்ளிட்ட 18 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்கள் உள்ளடங்கலாக 18 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

குறித்த மாவட்டங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது (ம-03)


## வேலையாட்கள் தேவை

வடமராட்சி பகுதியில் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு பாதுகாப்பு உத்தியோகத்தராக கடமையாற்ற ஆண்கள் தேவை.
பருத்தித்துறை நகர் பகுதியில் இயங்கும் தனியார் நிறுவனத்தில் பணியாற்ற கணினி அறிவுள்ள பெண்கள் தேவை. (C-1984)

077 076 1700
070 347 7507

## VACANCY

Cashier, Clerk, Waiter, Cleaner, Snakes Maker, Sales Executive, Technician.

dewmasweb.com (6576)

074 138 3368

## சமையலாள் தேவை

யாழ்.நகரில்-இயங்கும் உயர்தர உணவகம் ஒன்றிற்கு சமையலாள் உடன் தேவை.
ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
( பழக விரும்புவர்களும் விரும்பத்தக்கது )
தொடர்புகளுக்கு (6583)

077 713 4777

## A/L Physics Online Classes

பொறியியல் (Mechanics)
Mon, Tues, Thursday - 9.30pm கடந்தகால Essay வினாக்கள்
ஆரம்பம் : 19.04.2021 (C-1986)
2021/2022 Call or Whatsapp - 074 136 5446
Mr.C.Thivyan B.sc, PGDE
(யாழ்.தேசிய பாடசாலை ஆசிரியர்)

May மாதம் நடைபெறவுள்ள புகையிரத நிலைய அதிபர் MSO (MA) பரீட்சைகளுக்கான வகுப்புகள்
ஆரம்பம் - 17.04.2021.நாளை சனி காலை 9.30 மணி (C-1986)
கோலாசிற்றி
234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
021 320 2787, 077 843 5224

## தேவை | Vellan Construction

மேற்குறிப்பிட்ட கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர் (TO) மற்றும் கட்டட மேற்பார்வையாளர் தேவை. (C-1978)

021 226 4442

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை கிழக்கு, ஐயனார் வீதியில் 20 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு)
2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
( தெல்லிப்பழை வைத்தியசாலையில் இருந்து 600 மீற்றர் தூரம் )
பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை.
( தரகர் தேவையில்லை ) பரப்பு 5 இலட்சம். (6575)

077 814 7389
077 614 7333


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



பூவுலகில் 16 . 10 . 1939
விண்ணுலகில் 17 . 03 . 2021

அமரர் சங்கீதபூஷணம், கலாபூஷணம்

## சுப்பையா கணபதிப்பிள்ளை

17.03.2021 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தின் மூத்த உறுப்பினரும் கலைப் பொக்கிஷமுமான சுப்பையா கணபதிப்பிள்ளை அவர்கள் சுகயீனமுற்ற காலத்தில் அவருடன் ஒத்தாசையாகவிருந்து பணி செய்த வைத்தியர்கள், பணியாளர்கள் மற்றும் அன்னாரின் மரணச் செய்தியறிந்தவுடன் அனுதாபங்கள் தெரிவித்தோர், நேரடியாக அஞ்சலி செலுத்தியோர், இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டு அஞ்சலியுரைகள், பிரசுரங்கள் வெளியிட்டோர், பத்திரிகைகள் முகநூல் வாயிலாக அஞ்சலி செலுத்தியோர் மற்றும் இறுதி நிகழ்விற்கான அனைத்து ஒத்துழைப்பையும் வழங்கிய நண்பர்கள், உறவினர்கள் யாவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் 31ஆம் நாள் நினைவும் அந்தியேட்டிக் கிரியைகளும் இன்று (16.04.2021) வெள்ளிக்கிழமை திருவடிநிலையில் நடைபெறும். தொடர்ந்து நாளை மறுதினம் (18.04.2021) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியம் மற்றும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு – நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக தனித்தனியாக அழைப்பு விடுக்க முடியாத நிலையில் இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(6581)

பறாளாய் வீதி,
சுழிபுரம்.
021 225 0755
குடும்பத்தினர்


## நிரந்தர வேலை வாய்ப்பு

பிரபலமான காப்புறுதி நிறுவனத்தில் நிரந்தரமான வேலைக்கு பதவி வெற்றிடம் உள்ளமையால் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது.

பதவிநிலை

| PAC Wealth Planner | வெளிக்கள முகாமையாளர் |
|---|---|
| வேலை அனுபவம் - 2 வருடங்கள் | வேலை அனுபவம் - 2 வருடங்கள் |
| வயது - 25 - 40 | வயது - 25 - 40 |
| சம்பளம் - 40,000/= (நிரந்தரம்) | சம்பளம் - தகுதிக்கு ஏற்ப வழங்கப்படும். |

ஆர்வம் உள்ளவர்கள் உங்களது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களை 076 879 2992 என்ற இலக்கத்திற்கு sms அனுப்பி வைக்கவும். (C-1978)

NOTE : நிதி நிறுவனம்,அரச காப்புறுதி நிறுவனங்கள், தனியார் துறை ஆசிரியர்கள்ஆகிய துறைகளில் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

மேலதிக தகவல்களுக்கு 076 879 2992 இற்கு தொடர்பு கொள்ளவும்.

போட்டிப் பரீட்சை
விசேட இறுதி
கருத்தரங்கு
★★★★★★★★
SLTES open
sat,sun
9.00am- 3.00pm
SLTES Limited
sun
9.30am-3.00pm
MSO open& S.M
Batch-1 sat
9.00am-2.00pm
Batch-2 sun
8.30am-1.30pm
Agr R.O & M.A
Sun 9.30am
LL.B open
sun 9.30am
யாழ்பாணக்கல்லூரி
பட்டப்படிப்புகள்பிரிவு
(யாழ்ஆஸ்பத்திரி
முன்வீதியில்
கொமர்ஷல்
வங்கியருகில்) (C-1985)
076 688 3394

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் (C-1895)
V2 TRAVELS
எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர்
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 15'000/-
பயிற்சியின்போது - 10'000/-
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0777-068-777
v2vacancies@gmail.com

## வேலை வாய்ப்பு

கனகபுரம் கிளிநொச்சியில் அமைந்துள்ள கூகுள் சனா ரியல் எஸ்ரேட் நிறுவனத்துக்கு நிர்வாக அலுவலர் தேவை. (C-1981)

076 477 6456

## அன்னா Express

விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/= (C-1927)
070 3305500
077 888 9388
97-,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை, ஆவரங்கால், நெல்லியடி, சங்கத்தானை | பளை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லை | மல்லாவி, மன்னார், வவுனியா, கொழும்பு
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுதேடிக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி (C-1925)
0768226240 DHL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.